[illegible]
v-2 No-8
June 1926

3L
R673e211, N28
N29.2.8.
182134

...red No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 2—No. 8.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் உ | சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள்<br>1929 ஆகஸ்டு | இதழ் அ |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

திருப்பாதிரிப்புலியூர் சைவர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை ஆராய்ச்சி ... ... சகஎ

தலைமைப் பேருரைமேல் நிகழ்ந்த சில தடைகளுக்கு விடை ... ... ... உ0கெ

அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரவுண்மை ... உகூ

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.

உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

# சமாஜ அறிக்கைகள்

1. **ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்:**—ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநக்ஷத்திரமாகிய முதியனல் லாடிதன்னில் சுத்தமாம் சுவாதிநாளில் மாலை 4-மணிக்கு (11-8-29) திருமயிலை கபாலீச்சரத்தில் சுவாமிகள் தேவாரப்பதிப்பு வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கையொப்பம் செய்தவர்கள் விரைந்து தங்கள் கையொப்பத் தொகையைச் செலுத்துவார்களாக. ஏனையோர் தாமதமின்றி முன்பணம் அனுப்பிப் புத்தகங்களைப் பெறுவார்களாக. முன்பணம் அனுப்பியவர்கட்குப் புத்தகங்களை யனுப்பிய பிறகே வி. பி. ஆர்டர்கள் கவனிக்கப்படும்.

2. சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு ஒவ்வொரு சைவ சபையும் இணைக்கப்பட வேண்டுமென்று சைவ மகாநாடு தீர்மானித்திருக்கிறது. இதையொட்டித் திருநெல்வேலி, திருப்பாதிரிப்புலியூர் கூட்டங்களிற் கலந்துகொண்ட சைவ சபைகளும் ஏனைய சைவ சபைகளும் நம் சமாஜத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்று இவ்வறிக்கையைக் கண்டவுடன் விண்ணப்பஞ் செய்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். அவ்வாறு இணைக்கப்படுவதால் சமாஜத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் மூன்றுக்குக் குறையாமல் உதவிசெய்து நமது பத்திரிகையையும் இலவசமாகப் பெறலாம். வேறு எவ்வகையான பொருள் சம்பந்தமும் இவ்வாறு இணைத்துக் கொள்வதால் ஏற்படாது. ஒவ்வொரு சபையும் உடனே முந்துக.

3. திருப்பாதிரிப்புலியூரில் கூடிய சைவ மகாநாட்டில் கண்ட (ஒன்று முதல் நான்கு வரையுமுள்ள) உண்மைகளை ஒப்புக் கொள்வோரே சைவர்கள். அவர்களே சைவ சபைகளில் வாக்குரிமைக்குத் தகுதி புடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நமது சமாஜப் பொதுக் கூட்டமும் அவ்வாறே தீர்மானித்திருக்கின்றது. ஆகவே நமது சமாஜத்து அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வாக்குரிமை வேண்டுமென்று கருதினால் உடனே காரியதரிசிக்கு அவ்வுண்மைகளை ஒப்புக்கொள்வதாகத் தெரிவிக்க வேண்டும். இவ்வுண்மைகளை ஒத்துக் கொள்ளாதவர்களும் உடனே தெரிவித்தால் அவர்கள் வாக்குரிமை யில்லாதவர்கள் என்று தனியாகக் குறித்துக் கொள்வதற்குச் சௌகரியமா யிருக்கும். இவ்வறிக்கையைக் காணும் ஒவ்வொருவரும் விரைந்து தமது கொள்கையை உள்ளவாறு தெரிவித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

4. கோடை விடுமுறைக்காக நிறுத்தி வைக்கப்பட்ட "சிவஞானபோதம்" பாடவகுப்பு மீண்டும் 15—7—1929 திங்கட்கிழமை முதல் திருவாளர் - கி. குப்புச்சாமி முதலியார் அவர்களால் கோவிந்தப்ப நாய்க்கன் தெருவிலுள்ள 150-வது இல்லத்தில் தொடங்கப்பட்டது.

5. திருவாளர் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் பல ஆண்டுகள் நம் சமாஜத்தில் காரியதரிசியாகவும் பத்திராசிரியராகவும் தொண்டுபுரிந்தவரென்பது அனைவரும் அறிந்ததொன்று. இவர் 1924ளு ஜனவரிமீ முதல் 1926ளு மேமீ வரையில் மயிலாப்பூரில் சமாஜத்தின் சார்பில் சனிக்கிழமைதோறும் சிவஞானசித்தியார் பாடமாக நடத்தி முடித்தனர். இவ்வாண்டு தைப்பூசம் முதல், ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும் சிவஞானபோதம் பாடமாக நடத்தி வருகின்றனர். இவ்வரிய தொண்டுகட்கெல்லாம் திரு. முதலியாரவர்கள் கைம்மாறு கருதியதுமில்லை பெற்றதுமில்லை. இம்மட்டிலோ? தம் சொந்தப்பணத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபா செலவழித்து "திருக்குறள் விளக்கம்" என்று திருக்குறளுக்கும் பரிமேலழகர் உரைக்கும் தெளிபொருள் விளக்கப் பேருரையும் இயற்றி வெளியிட்டிருக்கின்றனர். இத்தகைய அரிய தொண்டு புரிந்துவரும் பேரறிஞராகிய திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்கட்கு நமது சமாஜத்தினரும் சைவமக்களும் செய்தற்குரிய கைம்மாறு ஒன்றே உளது. அதாவது அவர் வெளியிட்டுள்ள 'திருக்குறள் விளக்கம்' என்ற நூலை வாங்கி வாசித்து மேன்மேலும் அத்தகைய அரியநூல்களை அவர் இயற்றுமாறு ஊக்குவித்தலே. ஒவ்வொருவரும் இதில் முந்துக. திருக்குறள் விளக்கத்தைப் பற்றிய விளம்பரத்தை மற்றோரிடத்தில் காண்க.

6. திருவாளர் பொ. முத்தையா பிள்ளை யவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் தகாத பிரசாரம் செய்ததாக சென்ற இதழில் வெளியிடநேர்ந்தது. அவ்வாறு செய்யவில்லையென்று அவர் தெரிவித்துள்ளார். ஆகவே அவ்வகைப் பிரசாரத்தைப் பற்றியும் அவர் அதிற் கலந்து கொண்டதைப் பற்றியும் சென்ற இதழில் நாம் எழுதியதற்கும் இத்தகைய செய்தியை உண்மைக்கு மாறாக நமக்குச் சிலர் தெரிவித்தமைக்கும் வருந்துகிறோம்.

இங்ஙனம்:

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,** காரியதரிசி.

ஓம்

# சித்தாந்தம்

“ ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதருவாணியை உள்நாடு ”


| | | |
|---|---|---|
| மலர் உ | சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள்<br>1929 ௵ ஆகஸ்டு௴ | இதழ் அ |


## திருப்பாதிரிப்புலியூர் சைவர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை ஆராய்ச்சி


[போ. முத்தைய பிள்ளை]


திருப்பாதிரிப் புலியூரில் கூடிய “சைவர் மகாநாட்”டில் தலைமை வகித்த “சுவாமி வேதாசல மென்னும் மறைத்திரு-மறைமலையடிகள்” நிகழ்த்திய சொற்பொழிவு “தலைமைப் பேருரை” என மகுடமிட்டுச் சூன் மாசத்துச் ‘சித்தாந்தத்’ தில் வெளி வந்திருக்கின்றதென்பது நேயர்களுக்குத் தெரியும்.

இது மிக இனிய செந்தமிழ்ச் சொற்களால் ஆக்கப்பட்டிருப்பது போற்றத் தக்கது ; வடமொழிச் சொல் அறவேயில்லாததென்று சொல்லுதற்கில்லை ; இன்பம் பொருள் அறம் என்னும் மூன்றனையும் முறையே ஆராய்ந்து முடித்திருக்கின்றது. ஆராயும் முறையில் காதல் இன்பத்துக்குத் தலைமை கூறி ஒவ்வொருவரும் தத்தம் மனஞ் சென்றவாறு சென்று காதலின்பத்தைத் துய்ப்பதற்கு வகுப்புவேற்றுமை தடையா யிருக்கிறதென்றும், ஆகையால் அதனைத் தொலைத்துவிடவேண்டுமென்றும் வற்புறுத்துகின்றது.

அடிகளின் உரையை அழுத்தந் திருத்தமுள்ள பழஞ் சைவர்கள் ஏற்று மயங்காரென்பது துணிபு; ஆயினும், அழுத்தந்திருத்த மற்ற பழஞ் சைவரும் புதுச்சைவரும் ஏற்று மயங்குவாரதலின், அவருடைய நன்மையின் பொருட்டு ஆராய்தல் இன்றியமையாதது. ஆகையால் ஆராயத் தொடங்குகின்றேன்.

## க. இன்பம்

### அடிகள் உரை

இன்பமும் பொருளும் அறனும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்தமையால், மக்கள ளடைதற்குரிய உறுதிப் பொருள்களுள், இன்பமே முதன்மையானது. ஆசிரியர் திருவள்ளுவ நாயனர் அறம் பொருள் இன்பமென அறத்திற்கு முதன்மை கூறினாராயினும், அறத்தை இல்லறம் துறவறம் என வகுத்து இல்லறத்தை முதற்கண் வைத்தமையால் அவர்க்கும் இன்பமே முதன்மை யென்பது கருத்து.

### ஆராய்ச்சி

தொல்காப்பியர் அருளிச்செய்தது இலக்கண நூல். அதில் பொருளிலக்கணம் கூறும் முறையில் இன்பத்தை அகப்பொருளாகவும் பொருள் அறம் வீடுகளைப் புறப்பொருளாகவும் வகுத்து இன்பத்தைப்பற்றிக் கூறும் களவியலில் இன்பத்தை முன்வைத்துப் பொருளறங்களைப் பின் வைத்தார். உறுதிப் பொருள்களுள் இன்பந்தான் முதன்மையான தென்று அவர் கூறவில்லை. சொல்லப் புகுந்த பொருளை முதன்மையாக வைத்துக் கூறுதல் மரபு. கூறுங் காலத்து அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது எதுவோ அதனையுங் கூறுதல் வழக்கு. அவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியர் அன்பு துணையாக இன்பம் நிகழ வேண்டுமென் றருளிச் செய்தனர். இனம்பற்றிப் பொருளும் அறனும் உடன் கூறப்பட்டன.

ஆசிரியர் திருவள்ளுவனர் அருளிச் செய்தது மக்களுக்குரிய உறுதிப் பொருள்களை முறைப்படக் கூறும் இலக்கிய நூல் [illegible] அறம் பொருள் இன்பங்களை முறையாக வைத்தார். இல்லறத்தை முன் வைத்ததனாலேயே இன்பத்தை முன் வைத்தாரென்பது பெறப்படுமாயின், பின்னர் காமத்துப் பால் கூறியது மிகைபடக் கூறல், கூறியது கூறல் என்னும் குற்றத்தின் பாற்படும். இல்லாளோடு இருந்து செய்யும் அறமே இல்லற இயலில் கூறப்பட்டது. இல்லாளோடு கூடி நுகரும் இன்பம் காமத்துப் பாலில் களவியலில் கூறப்படுகின்றது. ஆகவே, தொல்காப்பியத்துக் களவியலிற் கூறப்பட்ட இன்பம், திருக்குறள் காமத்துப் பால் களவியலிற் கூறப்பட்ட இன்பமே யாகும். இந்த இன்பத்தை அகப்பொருளிலக்கணங் கூறுமுறையில் தொல்காப்பியர் முன் வைத்தார். அறத்தாலும் பொருளாலும் அடையப்படுவது இன்பமென்னும் முறைபற்றித் திருவள்ளுவர் பின் வைத்தார் எனக் கொள்ளுதலே முறையாகும்.

### அடிகள் உரை

இன்பத்தை நுதலியன்றி அறஞ் செய்வாரையும் பொருள்செய் வாரையும் யாண்டுங் கண்டிலமாகலின், தொல்காப்பியனர் இன்பத்தை முதல் வைத்த முறையே மக்களியற்கையோடு பொருந்துவதாதல் நன்கு துணியப்படும்.

### ஆராய்ச்சி

அனைவராலும் விரும்பப் படுவது இன்பமே. இன்பம் வேண்டியே அனைவரும் பொருளை யீட்டுகின்றனர்; இன்பம் வேண்டியே அறத்தைச் செய்கின்றனர். ஆயினும் தாமெண்ணியவாறு பொருள் கைகூடாமையும் அறம் முற்றுப் பெறுமையும் பலரிடத்துக்காணப் படுகின்றன. இவற்றிற்குக் காரணம் என்னென்று சொல்வது? முன் செய்யப்பட்ட வினையென்று தானே சொல்லவேண்டும். அவ்வினை நல்லதாயின் அறனெனப்பட்டு இப்பொழுது இன்பத்தைப் பயக்கும்; தீயதாயின் பாவ மெனப்பட்டுத் துன்பத்தைப் பயக்கும். ஆகவே, ஒவ்வொருவரும் தாம் தாம் எண்ணியவாறு பொருளைப் பெறுதற்கும், இன்பத்தை நுகர்தற்கும், அம்மட்டோ பேரின்பமாகிய முத்தியைப் பெறுதற்கும் அறமே காரண மென்பது பெறப்படுதலாலும், அறத்தின் வழியே பொருளையீட்ட வேண்டுவதும் இன்பத்தை நுகர வேண்டுவதும் முறையாதலாலும், அறமே முதன்மை யென்பது பெறப்படும். இக்கருத்துப்பற்றியே "சிறப்பீனுஞ் செல்வமுமீனும் அறத்தினூஉங் - காக்க மெவனே வுயிர்க்கு" என்றனர் திருவள்ளுவனர்.

### அடிகள் உரை

இன்பமே முதல் என்பது திருவள்ளுவனர்க்கும் உடம் பாடாதல் "அன்பும் அறனும் உடைத்தாயின்" என்னும் திருக்குறளால் பெறப்படும்.

### ஆராய்ச்சி

இக்குறள் அன்பு முதன்மை என்பதற்கு எடுத்துக் காட்டாகு மன்றி, இன்பம் முதன்மை யென்பதற்கு எடுத்துக் காட்டாகுமா? ஆகா தென்க.

### அடிகள் உரை

இவ்வின்ப வொழுக்கமானது மெய்யன்பின் வழி நடக்குமாயின், அப்போதுதான் அது, காதலின்பமென உயர்த்துப் பேசப்படும் என்பதும், அஃது அங்ஙனம் அன்பின் வழி நடவாதாயின் இழிந்த காமமென இழித்துப் பேசப்படுமென்பதும் நம் செந்தமிழ்த் தெய்வ ஆசிரியரெல்லார்க்கும் ஒத்தமுடிபா யிருக்கின்றன.

### ஆராய்ச்சி

இன்பமும் என்றற் றொடக்கத்துச் சூத்திரத்திலேயே "காமக் கூட்டங் காணுங்காலை" என்றனர் தொல்காப்பியர். "காமஞ் சான்ற கடைக்கோட் காலை" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தை அடிகளே எடுத்துக் காட்டி "காதலன்பால் துய்த்த காம இன்பம்" என உரையுங் கூறுகின்றார்கள். இன்னுந் தொல்காப்பியத்தில் பல இடங்களில் காமம் என்ற மொழி கூறப் பட்டுள்ளது. திருக்குறளிலும் காமத்துப் பாலெனப் பெயரிட்டுப் பல குறள்களில் காமம் என்ற மொழி கூறப்பட்டுள்ளது. இவ் வாறாகவும், காதலின்பம் உயர்ந்ததெனவும் காமந் தாழ்ந்ததெனவும் வேற்றுமைப்படுத்துக் கூறுதலால் பயனென்னை? இன்பம் காமம் என்பன ஒரே பொருளைக் குறித்த தென்மொழியும் வடமொழியுமேயன்றிப் பிறிதில்லை.

### அடிகள் உரை

இடையே புகுந்த சாதி வேற்றுமை யென்னுங் கொலைஞனல் வெட்டியழிக்கப்பட்டுக் காதலன்பு என்னும் உயிர் ஓடிப் போனபின், இழிந்த காமப் பிணவாழ்க்கையிற் காலங்கழிக்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டால் இதனினும் வேறு கொடுங் கொலையுளதோ?

### ஆராய்ச்சி

இடை என்பது எதற்குப் பின் எதற்கு முன் என்னும் கேள்விக்கு இடனும். தொல்காப்பியரை ஏற்றுக் கொண்டமையால் அவர் காலத்துக்

18734

குப் பின் என்பதும் இக்காலத்துக்கு முன் என்பதும் அடிகள் கருத்தாகக் கொள்ளல் வேண்டும். கொள்ளுங் கால் தொல்காப்பியர் காலத்தில் சாதி வேற்றுமையில்லை என்பது பெறப் படும்.

மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே

என்றும்,

மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப

என்றும்,

உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான

என்றும்,

அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்

என்றும்,

நூலே கரக முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய

என்றும்,

படையும் கொடியும் குடையு முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய

என்றும்,

வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

என்றும், தொல்காப்பியர் கூறுகின்றமையால் அவர் காலத்திற்கு முன்னரே சாதி வேற்றுமை யிருந்ததென்பது பெறப்படும். படவே, களவியலிற் கூறப்பட்டவாறு இன்பத்தை நுகர்தல் தத்தம் வகுப்பில் ஒத்த குணமும் அழகும் வாய்ந்த ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் உரித்தாகு மன்றி, உயர் குலத்துதித்த அழகும் குணமும் வாய்ந்த ஆண்மக னொருவன் இழிகுலத்துதித்த அழகும் குணமும் வாய்ந்த பெண்மகளையும், உயர் குலத்துதித்த பெண்மகள் இழிகுலத்துதித்த ஆண்மகனையும் மணந்து இன்ப நுகர்தல் கூடுமென்பது பெறப் பட மாட்டாது. சாதிவரம்பின்றி மனஞ்சென்றவாறு ஆணும் பெண்ணும் கூடுதலால் பிறப்பவரே சங்கர சாதியரென இழித்துக் கூறப்படுவர்.

### அடிகள் உரை

காரைக்காலம்மையார் தாமே தமக்குத் தக்கா னொருவனைத் தெரியா திருக்க, அவர்தஞ் சுற்றத்தார் அவ்விருவர் இயல்பும் ஆய்ந்தாய்ந்து பாராமல் அவர் தம்மைப் பிணைத்து விட்டனர். அம்மையார் அருமை பெருமை கட்கேற்ற கணவனாக அமையாமையால் அம்மையாரிடத்துத் தெய்வத் தன்மை அறிந்தவுடன் அவரைவிட்டுப் பிரிந்து வேறொரு பெண்ணை மணந்து கொண்டதுமன்றி அம்மையார் சென்றபோது அவர் தம் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

### ஆராய்ச்சி

பெண்கள் தாமே கணவனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுமுறை இக்காலத்தும் முற்காலத்தும் பரத்தையரிடத்தும் பரத்தையரோ டொத்த சில வகுப்பாரிடத்தும்காணப்படுகின்றதேயன்றி உயர்ந்த வகுப்பாரிடத்துக் காணப்படவில்லை. அம்முறை உயர்ந்த வகுப்பார்க்குரிய தாயின் ஆசிரியர் சேக்கிழார் அதனை எடுத்துக் காட்டியிருப்பர். அம்மையாரும் அவர் கணவனும் இல்லறம் நடாத்திய முறையை,

மகட்கொடையின் மகிழ்சிறக்கும்
வரம்பிறனங் கொடுத்ததற்பி
னிகர்ப்பரிய பெருஞ்சிறப்பி
னிதிபதிதன் குலமகனுந்



தகைப்பில் பெருங் காதலினாற்
றங்குமனை வளம் பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின்
மேம்படுதன் மேவினான்

என்றும்,

ஆங்கவன்ற னில்வாழ்க்கை
யருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும்
பொருவிடையார் திருவடிக்கீ
ழோங்கியவன் புறுகாத
லொழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின்
பண்புவழாமையி னிற்பயில்வார்

என்றும், மிக அழகாகக் கூறுகின்றார். கணவன் தக்கவனில்லை யென்று ஆசிரியர் சேக்கிழார் எவ்விடத்துங் கூறவில்லை. அங்ஙனமாகவும் தக்கவனில்லை யென்று அடிகள் கொண்டது வியக்கத் தக்கது. தெய்வத் தன்மையை அம்மையா ரிடத்துக் கண்டவுடன் பிரிந்ததும், பின்னர்க் கண்டவுடன் வணங்கியதும் தக்கவனில்லை யென்பதற்குக் காரணங்களாக அடிகள் கூறுகின்றார்கள். தன்னை வணங்கும் மனைவியினிடத்துத் தான் வணங்குந் தெய்வத் தன்மை கண்டபின் மனைவியாகக் கொள்ளாது தெய்வமாகக் கொண்டமை தகுதியுடைமையைக் காட்டுமன்றித் தகுதி யின்மையைக் காட்டுமா? மிதிக்கப்படும் கல்லினிடத்து வணங்கப்படும் தெய்வத்தன்மை கண்டால், கண்டபின் வணங்குதல் தான் அறிவுடைமையாகும்; மிதித்தல் அறிவுடைமையாகாது. பிரிந்த பின்னரும் வணங்கிய பின்னருமாவது கணவன் குறை செய்தானென ஆசிரியர் கூறுமை கவனிக்கத்தக்கது.

### அடிகள் உரை

காதலன்பிற் சிறந்த இன்ப வாழ்க்கை இடைநின்ற சுற்றத்தாரின் முயற்சியாற் சிதைவுபட்டுக் காரைக்காலம்மையார்க்கு இனிது வாயாது போனமைபோலவே, சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் காதல் மனைவாழ்க்கை நன்கு வாயாது போயிருக்கும். ஆனால், எல்லாம் வல்ல இறைவன் அவர்பால் மிக்க இரக்கம் பூண்டு அவர்க்கு அங்ஙனம் நேர வொட்டாமல் அவர் சுற்றத்தார் கூட்டிய மணத்தைத் தடை செய்தருளினன். பின்னர் சுந்தரமூர்த்திகள் என்னும் சைவ அந்தணர் பெருமான் உருத்திரகணிகையர் குலத்திற் பிறந்த பரவை நாச்சியாரையும், வேளாளகுலத்திற் பிறந்த சங்கிலி நாச்சியாரையும் தமது காதல் சென்ற வழியே மணந்து கொண்டனர். அருளிரக்கம் வாய்ந்த இறைவனே ஒரோ ஒருகாற் காதலன்புடையாரை ஒன்று சேர்த்தற் பொருட்டுப் பொது மக்களாக்குஞ் சாதி வேற்றுமைக் கட்டுப்பாடுகளை முற்றச் சிதைப்பன்.

### ஆராய்ச்சி

எல்லாம்வல்ல இறைவன் சுந்தரமூர்த்திநாயனார் பால் மிக்க இரக்கங் கொண்டு அவர்க்குச் சுற்றத்தார் கூட்டிய மணத்தைத் தடுத்தவாறுபோல் காரைக்காலம்மையார் மணத்தையும் தடுத்திருக்கலாம். அம்மையாரிடத்துக் கருணை யில்லாமையால் அவ்வாறு செய்யவில்லை போலும். இது நிற்க.

சுந்தரமூர்த்தி நாயனார், ஆலால சுந்தரர் என்னும் பேருடன் கைலையில் சிவபெருமானுக்குத் திருத்தொண்டராக வசிக்குங் காலத்து அப்பெருமானுக்கினிய மலர் கொய்தற் பொருட்டு நந்தனவனஞ் சென்றார். அப்பொழுது உமாதேவியாரின் சேடியாராகிய அநிந்திதை கமலினி என்னும் இருமாதர்களும் அம்மையார்க்

குப் பூக்கொய்தற் பொருட்டு அங்குச் சென்றனர். சிவபெருமான் றிருவருளால் ஆலாலசுந்தரர் மனம் அப்பெண்களிடத்துச் சென்றது. அப்பெண்கள் மனமும் ஆலால சுந்தரரிடத்துச் சென்றது. பூக்கொய்யுங் காலத்துப் பெண்களிடத்து மனஞ் சென்ற குற்றத்திற்காகச் சிவபெருமானாணையால் ஆலாலசுந்தரர் இந்நில உலகத்திற் சுந்தரராய்ப் பிறந்தார். அவ்வாறே அவ்விரு பெண்களும் இந்நிலவுலகத்தில் பரவையாராகவும் சங்கிலியாராகவும் பிறந்தார். குற்றத்திற்காகத் தண்டிக்கப்படும் தண்டனைகள் பலவகைப்படும். அவற்றுள், தீவுகளில் ஆயுள்வரை வசிக்கும்படி செய்யப்படும் தண்டனை யொன்று. இத்தண்டனையைப் பெற்றவர் இவ்வாறு தண்டிக்கப்பெற்று அந்தத் தீவில் வசிக்கும் பெண்களுள் தமக்கு விருப்பமுடைய பெண்ணை வகுப்புமுறை ஆராயாது, கூடி இன்பம் நுகரவேண்டுமே யன்றி, வகுப்பு முறைப்படி மணஞ் செய்து இன்பநுகர யியலாது. சுந்தரமூர்த்தி நாயனார் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு இந்நில வுலகத்து வந்தவ ரென்பது,

ஆதி மூர்த்தி அவன்றிற நோக்கியே
மாதர் மேன்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றியம் மெல்லிய லாருடன்
காத லின்பங் கலந்தணை வாயென.

கைக ளஞ்சலி கூப்பிக் கலங்கினேன்
செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
யைய னேதடுத் தாண்டருள் செய்யென

என்னும் பெரிய புராணச் செய்யுட்களாலும்,

கொந்தலர் கொய்யும் போது
கூர்விழி மையலாலே
பைந்தொடி மடவார் தம்மைப்
பார்த்தலாற் கைலைவெற்பிற்
சுந்தரன் பட்டகாதை யறிதிரோ
துணர்மென் போதால்
அந்தணர் கீழ்க ளாவர்
கீழ்களந் தணர்களாவர்.

என்னும் புட்பவிதிச் செய்யுளாலும் பெறப்படும்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்று
தவாஅப்பிறப்பீனும் வித்து. [றுங்

ஆதலின், கைலாயத்தில் பெண்களிடத்துச் சென்ற விருப்பங் காரணமாக இந்நிலவுலகத்துப் பிறந்தாரென்பதும், அவ்விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுதற் பொருட்டு விரும்பப்பட்ட பெண்களும் இவ்வுலகத்துப் பிறந்திருக்கின்றார் என்பதும் அறியாத சுற்றத்தார் தம் வகுப்பு முறைப்படி மணம் முடிக்கத் தொடங்கினர். அம்மணம் முடிந்திருப்பின் அது உயிரின் முயற்சியால் முற்றுப்பெற்றதாய் மேலும் பிறவிக்கேதுவாய் மயங்குதற்கேதுவாகும். "மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள்செய்யென" முன்னரே சிவபெருமானை நோக்கிப் பிரார்த்தித்துள்ளாராகலின் அவ்வாறே சிவபெருமான் உயிரின் முயற்சியால் உற்ற மணத்தைத் தடுத்து ஆட்கொண்டு தமது திருவருளின் வழியாய் பரவையாற் சங்கிலியாரைமணஞ் செய்வித்துத் திருவருளின் வழியாகவே இன்பம் நுகரச் செய்தனர். சுந்தரராய் வந்து திருத்தொண்டத் தொகை பாடுதற்பொருட்டே ஆலால சுந்தரர் மனத்தைப் பெண்களிடத்துத் திருவருள் செலுத்திற்றே யன்றி, வினை காரணமாகச் சுந்தரர் மனம் செல்லவில்லை. வினை காரணமாகச் சென்றிருப்பின் மீண்டும் வினையையே செய்து பிறந்திறந் துழலுவர். திருவருளின் ஏவல் காரணமாகச் சென்றமையின், எத்துணைப் பெரியாராயினும் குற்றஞ் செய்யின் தண்டிக்கப்படுவர் என்பதை இவ்வுலகத்தார்க்கு அறிவுறுத்தற் பொருட்டுப் பிறந்து திருவருளையே செய்தனர்.



இவ்வுண்மையை உற்று நோக்குவார்க்கு அடியார் பெருமையை உலகத்தார்க்கு அறிவுறுத்தற் பொருட்டு இறைவன் ஆலால சுந்தரரை உலகத்தில் சைவ அந்தணர் குலத்தில் சுந்தரராய்த் தோற்றுவித்து, குற்றஞ் செய்தார்க்கு குற்றமான மணமே உரித்தென்பதை உலகத்தார்க்கு அறிவுறுத்தற் பொருட்டுப் பரவையாரையும் சங்கிலியாரையும் வெவ்வேறு குலத்திற் பிறக்கச் செய்து மணத்தை முடித்து வைத்தனன் என்பதும், வகுப்பு வேற்றுமையைச் சிதைத்தற் பொருட்டு அவ்வாறு செய்திலன் என்பதும் திருவருள் காரணமாகப் பிறந்த சுந்தரர் சரிதத்தை வினைகாரணமாகப் பிறந்த மக்கள் மேற் கொள்ளுதல் கூடாதென்பதும் இனிது விளங்கும்.

### அடிகள் உரை

ஆரியக் குருக்கள் மார் தமது நலத்தின் பொருட்டுக் கட்டிக்கொண்ட சாதிவேற்றுமையினைக் குருட்டுப் பிடியாய்ப் பிடித்து, அப்பரும் அப்பூதிகளும் சாதிவேற்றுமை பாராது ஒருங்கிருந்து அளவளாவி உணவு கொண்டதும், சுந்தரமூர்த்திகளும் அங்ஙனமே சாதிவேற்றுமை பாராது பரவையார் சங்கிலியாரை மணந்து கொண்டதும் அப்பெரியார்க்கு ஒக்கும்; இழிந்த நிலைக்கண் நிற்கும் நம்மனோர்க்கு ஒவ்வாதென்று, தம்மைக் கொழுத்த சைவரெனக் கூறிப் பெருமை பாராட்டிக் கொள்வார் சிலர் கூறுகின்றனர். சுந்தரமூர்த்திகள் சாதி வேற்றுமையினைப் பெரிதாக நினைந்திருந்தனராயின் பரவையார் சங்கிலியார் என்னும் நல்லாரிணக்கத்தை யிழந்து விட்டவராதல்வேண்டும். முற்றத் துறந்த பட்டினத்தடிகளும் "நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே—யல்லாது வேறு நிலையுளதோ" என்று அருளிச் செய்தனரல்லரோ?

### ஆராய்ச்சி

மேல் ஓர் இடத்தில் இடையே புகுந்த சாதி வேற்றுமை என்றும், பிறிதோரிடத்தில் பொது மக்களாக்கும் சாதி வேற்றுமை என்றும், இவ்விடத்தில் ஆரியக் குருக்கள்மார் தமது நலத்தின் பொருட்டுக் கட்டிக்கொண்ட சாதி வேற்றுமை என்றும் ஓர் உறுதியின்றிப் பலபடக் கூறுகின்றார்கள். இதனாலேயே சாதி வேற்றுமையின் உண்மை துணியப்படவில்லை என்பது நன்கு விளங்கும். நிற்க.

அப்பூதியடிகள் அப்பரைக் குருவாகக் கொண்டனர். இவ்வுண்மை அப்பூதியடிகளைக் கண்டபின் தான் அப்பருக்குத் தெரியும். "விடிற்புலி தீபாம் பெனினும் வீழ்வார்" மாணாக்க ரென்பது உலகத்தார்க் கறிவுறுத்தற் பொருட்டு, அப்பூதியடிகளை உடனிருந்துண்ணுகவென அப்பர் பணித்தனர். குருவின் ஏவலைச் செய்வாராய் அப்பூதியடிகளும் உடனிருந்துண்டனர். அன்றியும், அப்பர் துறவி. துறந்தபின் முன்னுள்ள பிறப்பினாலாய சாதியும் துறக்கப்பட்டதாகும். இவ்வாறு குருவாயும் துறவியாயுமுள்ள இழிபிறப்பாளனொருவன் உயர் பிறப்பாளனாகிய தன் மாணாக்கனை உடனிருந்துண்ணுகவென ஏவி, அவன் அவ்வாறுண்ண மறுத்தால், அவனைச் சாதிச் செருக்குற்றுத் திரி

பவனென இழித்துக் கூறுதல் தகும். தன்னைக் குருவாகக் கொள்ளாத உயர் குலத்தோரையும் என்னைக் குருவாகக் கொண்டு உடனிருந்துண்ணுக வென ஏவுதலும், உண்ணேனெனில் சீறி அவனை யிழித்துக் கூறுதலும் அறிவுடையோர் செயலாகுமா?

இனி, சுந்தரமூர்த்திகளுக்குப் பரவையார் சங்கிலியாருடைய இணக்கத்தை, பட்டினத்தடிகள் திருவாக்கிலுள்ள நல்லாரிணக்கமாகக் கொண்டது சாலவியக்கத் தக்கது. நல்லார் என்பது அறிஞரையும் பெண்களையும் குறித்த பல பொருளொரு சொல். பரவையாரும் சங்கிலியாரும் அறிஞரென்ற முறையில் நல்லாரா? பெண்களென்ற முறையில் நல்லாரா? அறிஞர் முறையில் எனின், இவர்கள் கூட்டத்தைச் சுந்தரர்க்கு அடியார் கூட்டமாக எங்கேனும் கூறப்பட்டிருக்கின்றதா? பெண்கள் முறையிலெனின், அஃது ஒக்கும். ஆனால், பட்டினத்தடிகள் திருவாக்கிலுள்ள நல்லார் என்பதற்கு எடுத்துக்காட்டாகாது. ஆகுமெனின், வேறு நிலையுளதோ வென்பதனால் இது நிலையுடையதெனப்பட்டு "இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் தாழ்வும் எழிலுடம்பும் எல்லாம் வெளி மயக்கே" என்னும் பின்னடிகளின் கருத்தொடு முரணும். ஏன் இவ்வாறிடர்ப்படல் வேண்டும். நல்லார் இணக்கமென்பது அடியார்இணக்கத்தையும் நின்பூசை யென்பது சிவவழிபாட்டையும், ஞான மென்பது அதனை யுபதேசிக்கும் குருவழி பாட்டையும் குறிக்கும். இதுவே பட்டினத்தடிகள் கருத்து. இல்லாளோடு கூடி இன்பம் நுகர்ந்து கொண்டே சிவபெருமானை ஆராதிக்கலாம்.ஞானத்தைப் பெறலாமென்பது அவர் கூறிய இச்செய்யுளின் கருத்தன்று. இதனால் மனைவி மக்களோடிருந்து முத்தியடைதல் கூடாதென்பது என் கருத்தன்று. அதற்குப் பட்டினத்தடிகள் திருவாக்கை மேற்கொண்டது பொருத்தமில்லை யென்பது தான் என் கருத்து.

### அடிகள் உரை

பெரியோரான அவர்க்காயின் சாதி வேற்றுமை கடத்தல் தகும். சிறியோரான எமக்கோ தகாது என்பீரேல், சிறியோரான யாம் பெரியோராதல் எப்படி? அவர் காட்டிய நன்முறையினைப் பின்பற்றாது எந்நேரமும் சாதிச் சண்டையிலேயே செருக்குற்று மாழ்குவமாயின் யாம் பெரியோராதல் எவ்வாறு கைகூடும்.?

### ஆராய்ச்சி

உடனிருந்துண்டு அப்பரும் அப்பூதியடிகளும், பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து சுந்தரமூர்த்திகளும் பெரியாராயினரா? பெரியரானபின் அவை நிகழ்ந்தனவா? ஊன்றி நோக்கின் உண்மை புலப்படும். என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு என்னுளே நிற்கும் ஈசன் என்னிலும் இனியான் என எண்ணி, அயரா அன்பின் அவ்வரன் கழலேத்தி அப்பர் பெரியாராயினர். அப்பரைக் குருவாகக் கொண்டு தன்னையும் தன்னுடைமைகளையும் அப்பர் உடைமைகளாக எண்ணி அப்பூதி யடிகள் பெரியராயினர். சிவபெருமானே பிராமணராய் நேரில் வந்து தடுத்தாட்கொண்டு பின்னர் தனது உண்மை வடிவத்தைக் காட்டி அருள் செய்யப்பெற்றமையால் சுந்தரர் பெரியராயினர். ஆகையால், சிவபெருமானையும் சிவனடியாரையும் இடையறாத அன்பால் வழிபட்டுப் பெரியாராதல் வேண்டுமன்றிப் பெரியரான பின் திருவருளால் அப்பெரியாரிடத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளுள் தமக்கு விருப்பமுள்ளவற்றை அவாவினால் மேற்கொண்டு பெரியராதல் கூடாது.

### அடிகள் உரை

நம் ஆசிரியர் நடந்து காட்டிய முறைகளை நாம் அவர் நிலைக்கு ஏறும் வரையிற் பின்பற்றலாகாதென்றுரைப்பீர்களாயின், நம் ஆசிரியன்மார் அன்புக்கே உயர்வு கொடுத்துச் சாதி வேற்றுமையினைத் தாழ்த்தினால், நாம் அதற்குமாறாய்ச் சாதிக்கு உயர்வு கொடுத்து அன்பைக் கீழ்ப்படுத்தல் வேண்டும்; அவர்கள் பொய் சொல்லாதே புறங்கூறாதே என்றால், நாம் பொய் சொல்லிப் புறங்கூறித்திரிதல் வேண்டும். அவர்கள் குடியாதே கொலை செய்யாதே யென்றால் நாம் குடித்துக் கொலை செய்தல்வேண்டும். அவர்கள் சிவத்தை வணங்கு அடியார்க்குத் தொண்டுசெய் யென்றால் நாம் சிவத்தை வணங்காமல் அடியார்க்குத் தீமைசெய்தொழுகல் வேண்டும். ஏனென்றால், கீழ்நிலைக்கண் நிற்கும் நாம் மேல் நிலைக்கண் உள்ளார் சொன்னவைகளையும் செய்தவைகளையும் ஏற்றல் கூடாதென்பது குருட்டுச் சைவர் கொள்கையன்றோ? ஆனால் இக்குருட்டுச் சைவர் கூற்றை நம்மனோர் கேட்டு அதன்படி நடக்கப் புகுவராயின் இந்நாடு காடாய், இந்நாட்டின் கண் உள்ள மக்கள் விலங்கின் கூட்டங்களாய் மாறுதல் திண்ணம்.

### ஆராய்ச்சி

நம் ஆசிரியன்மாற் பெரியராதற்குச் செய்த செயல் வேறு; பெரியரானபின் திருவருள் வயப்பட்டு நின்று செய்த செயல் வேறு. இவை மேலுங் காட்டப்பட்டன. இறைவனிடத்துவைத்த இடையறாத அன்பே பெரியராதற்குச் செய்தசெயல். இது ஆசிரியன்மார் எல்லாரிடத்தும் ஒக்கும். பெரியரானபின் திருவருளால் அவரிடத்து நிகழ்ந்த செயல்கள் ஆசிரியரெல்லாரிடத்தும் ஒன்றுபோலின்றி வேறு வேறாய்க் காணப்படுகின்றன. தாம் பெரியராதற்குச் செய்த செயல்களை ஏனையோரும் பெரியராதற்பொருட்டு ஆசிரியர் அவர்க்கு உபதேசிப்பர். பெரியரானபின் திருவருளால் தம்மிடத்து நிகழ்ந்த செயல்களைப் பிறர்க்கு உபதேசிக்க மாட்டார்.

இங்கே அடிகள் கூற்றில் பொய் சொல்லாதே என்பது முதலியன உபதேச மொழிகள். அவற்றை மறுப்பது குருட்டுச் சைவர் கொள்கை தான். அன்புக்கு உயர்வு கொடுத்துச் சாதி வேற்றுமையினைத் தாழ்த்தினாலென்பது பெரியரானபின் திருவருளால் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் அநுபவ மொழி. அன்பு உயர்ந்தது அதனைக்கொள். சாதிவேற்றுமை தாழ்ந்தது அதனைக் கொள்ளாதே என்றிருப்பின் உபதேச மொழியாகும். "யானு மறியேன் அவளும் பொய் சொல்லாள்" என்பதுபோல அடிகள் உள்ளத்தில் இவ்வனுபவ மொழி தோன்றிற்று.

இன்ப உரையில் அடிகள் திரும்பத் திரும்பக் கூறப்பட்ட பக்கங்கள் இரண்டே யாகும். அவற்றுள் ஒன்று சாதி வேற்றுமையின்றி உடனிருந்துண்ணல். மற்றொன்று சாதி வேற்றுமையின்றி மங்கையரைக் கூடி இன்பம் நுகர்தல். இவற்றிற்கு எடுத்துக் காட்டாக மேற் கொள்ளப்பட்ட

வர் அப்பரும் அப்பூதியடிகளும் சுந்தர மூர்த்திகளுமாவர். இப்பெரியாரிடத்து நிகழ்ந்த உண்டல் கலத்தல்கள் திருவருளால் நிகழ்ந்தவை. இவற்றை நாம் தற்போத முனைப்பால் மேற்கொள்ளுதல் கூடாது. கூடுமாயின் கண்ணையிடந் தப்புதல் முதலிய செயற்கரிய செயல்களைச் செய்தற்கும், நாம் பிற்படுதல் கூடாது.

சாதி வேற்றுமை தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ளதென்பது மேலே காட்டப்பட்டது. “நற்சார்பில் வந்துதித்து” எனச் சிவஞான போதத்திலும், “தரையினிற் கீழைவிட்டுத் தவஞ் செய் சாதியினில் வந்து” எனச் சிவஞான சித்தியாரிலும் சாதி வேற்றுமை கூறப்பட்டுள்ளது. இழிந்த பிறப்பு, பார்ப்பான் பிறப்பு, அந்தணர், மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தும் என்பன வாதியாகத் திருக்குறளிலும் சாதி வேற்றுமை கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சாதி வேற்றுமை உடலுக்கேயன்றி உயிருக்கன்று. உடலும் உடல் சம்பந்தமான ஏனையவும் உயிருக்குத் துன்பத்தையே விளைவிக்கும். “மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க-லுற்றாற் குடம்பு மிகை.” என்றனர் தேவர். உடம்பில்லாத நிலையோ அறியாமையினையுடைய கேவல மெனப்படுதலின், உடம்பின்றியும் இன்பம் விளையாது. ஆதலின், உடம்பைக் கொண்டு சாதனத்தைச் செய்து உடம்பினுள் உத்தமனைக் கண்டு இன்புற வேண்டும். நித்திரை செய்யுங் காலத்து உடம்பிருந்துந் தோற்றாத வாறுபோல், உத்தமனைக் கண்ட காட்சியில் அழுந்துதலால் உடம்பு தோன்றாத நிலைவரும். அந்நிலை வரும்வரையில் நிட்டைசாதித்தலிலும் அந்நிலை வருதற்பொருட்டு இறைவனைப் பிரார்த்தித்துக் கரைந்துருகுதலிலும் அறிவைச் செலுத்த வேண்டும். அந்நிலை கைவரப்பெற்றால் உடம்பிற் குரியன வெல்லாம் உறங்கினவனிடத்துள்ள பொருள்கள் அவனுக்குத் தெரியாது நீங்குமாறு போல நீங்கும். எதுவரையும் உடம்பு தோன்றிக்கொண் டிருக்குமோ அதுவரையும் உடம்பிற்குரிய தருமங்களைத் தற்போத முனைப்பால் விடுதல் கூடாது. விடின், உத்தமனைக் கண்ட காட்சியு மறைந்து நரகத்திற்காளாக நேரும். இவ்வுண்மையினை,

“குறிப்பிடங் காலந்திக்கா சனங்
கொள்கை குலங் குணஞ்சீர்
சிறப்புறு விரதஞ் சீலந்
தபஞ்செபந் தியான மெல்லா
மறுத்தற வொழிதல் செய்தன்
மருவிடா மன்னி செய்தி
யுறக்குறு பவர்போல் வாய்மை
யொழிந்தவை யொழிந்து போமே”

எனச் சிவப்பிரகாசத்தும்,

“ஞால நீதியு நான்மறை நீதியும்
பால ருன்மத்தர் பிசாசரி லெனவும்
உறங்கினோன்கை வெறும்பாக் கெனவும்
தானேதவிரா தானுற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுந்துதல் திடமே”

எனச் சங்கற்ப நிராகரணத்தும் கூறுமாற்றாற் றெளிந்து கொள்க.

இவ்வாறு நூன்முறையைக் கொள்பவர் குருட்டுச் சைவரோ, கடப்பவர் குருட்டுச் சைவரோ என்பது அறிவுடையார்க்கு விளங்காமற் போகாது.

தற்போத மற்றுச் சரீரந் தோன்றாத நிலையினையுடைய பெரியார்க்குச் சாதி வரம்பு முதலியவை தோன்றாமை மாத்திரமன்று; பிறருந் தோன்றார். அவர் பரஞானத்தால் பரமே பார்த்திருப்பர். ஊழின் வலியால் ஓரோ ஒருகால் உடலும் உலகமும்



அவர்க்குத் தோன்ற வரும். வருங்கால் புறத்துச் செயல்கள் நிகழும். நிகழுங்கால், சிவனும் இவன் செய்தியெல்லாம் என் செய்தியென்றும், இவனுக்குச் செய்தது எனக்குச் செய்ததென்றும், பவமகல வுடனாகி நின்று கொள்வன்; பரிவால் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமாகையால், நாமும் பாதகத்தைச் செய்யலாமென் றெண்ணுதலும் செய்தலும் செய்ய ஏவுதலும் குருட்டுச் சைவர் கொள்கையாகும். ஆகையால் இறைவன் றிருவருளைப் பெறுதற்கான செபம் தியானம் யோகம் நிட்டைகளை அவரவர் தகுதிக்கேற்றவாறு செய்தலும் செய்வித்தலும் முறையாகுமன்றிக் கலியின் வலியால் இயல்பாகவே விலங்குகளின் இயல்பை மேற்கொள்ளும் மக்களுக்கு வகுப்பு வேற்றுமையின்றி உண்டு மங்கையரைக் கலந்து இன்பம் நுகர்ந்து விலங்கு போலத் திரியும்படி உபதேசித்தல் முறையாகாது. இவ்வாறான உபதேசத்தால் நாடு காடாய் மக்கள் விலங்கினங்களாய் மாறுதல் திண்ணம். இம்மட்டில் இன்ப ஆராய்ச்சி முடிந்தது.

## ௨. பொருள்

### அடிகள் உரை

தமக்குப் பொருளைச் சேர்த்துக் கொடுக்கும் ஏழைகளிற் பெரும்பாலாரைத் தீண்டாதவரென ஒதுக்கி வைத்தும், அவர் வணங்குதற்குத் தம் கோயில்களில் உள் வருதலுங்கூடத் தகாதென விலக்கியும், அவர் தம் மக்களோடு ஒப்ப இருந்து கல்வி பயிலுதலும் ஆகாதென அவரைத் துரத்தியும் அவ்வேழை மக்கட்குப் பெருங்கொடுமை செய்துவரல் தெய்வத்துக்கு அடுக்குமா?

### ஆராய்ச்சி

வகுப்பு வேற்றுமையின்றி உடனிருந் துண்ணுதற்கும், இழிகுல மகளிராயினும் தன்னால் விரும்பப்படின் அவளை மணந்து இன்பம் நுகர்தற்கும் பெரிய புராணத்திலுள்ள சரிதங்களை மேற்கொள்ளும் அடிகள், தீண்டாதவர் கோயிலுள் வருதல் கூடாதென்பதற்குப் பெரியபுராணத்திலுள்ள திருநாளைப் போவார் சரிதத்தை ஏன் மேற்கொள்ளக் கூடாது? இது தெய்வத்துக்கு அடுக்குமா?

## ௩. அறம்

### அடிகள் உரை

பௌத்த சமண சமயங்களும் அவற்றைப் பின்பற்றி எழுந்த ஆரியமிருதி நூல்களும் தவ வாழ்க்கையைத் துறவு நெறியின் பாற்படுத்துக் கூறும். இல்வாழ்க்கை யொன்றுமே அறனென வைத்துச் சொல்லப்படுதற்கு உரித்தாவதன்றித் துறவுவாழ்க்கை அறம் எனப்படுதற்கு உரிமையுடைத்தன்று. முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் நிலை இல்லறவாழ்க்கைக்கு வாய்ப்பதேயன்றித் துறவுக்கு வாயாது. ஆகவே, துறவறமென வழங்குதலும் சாலாது. அதனாலன்றோ துறவற மென்னுஞ் சொற்றொடரை தொல்காப்பியர் வழங்காராயினர். திருவள்ளுவரோ துறவறம் என்பதொன்று கூறினாராயினும், அவர் மனைவி மக்களைத் துறந்து தனியிருந்து நோற்பதே தவம் என்று ஓரிடத்தாயினுங் கூறாமையினை உற்று நோக்கும் வழி, மனைவியுந் தானுமாயிருந்து அகப்பற்றுப் புறப்பற்று இன்றித் தூய அன்பின் வழி நின்று நோற்பதாகிய பண்டைத் தவநிலையே அவர்க்கும் உடன்பா டென்பது உய்த்துணரக் கிடக்கின்றது.

## ஆராய்ச்சி

அப்பர் மாணிக்கவாசகர் பட்டினத்தடிகள் கொண்ட துறவு பௌத்த சமணச் சார்பு போலும். மிருதிநூல் வேதத்தைச் சார்ந்து எழுந்ததேயன்றி, பௌத்த சமண சமயத்தைச் சார்ந்து எழுந்ததன்று. மனைவி மக்களோடிருந்து பற்று அற்றிருக்கலாமென்பது உண்மை. அவ்வாறிருக்குங் காலத்துக் காமஇன்பத்திற் கருத்துச் செல்லின், அநுபவித்துக் கொள்ளலாம். அது குறையாகாது. துறவறத்தார்க்குக் காம இன்பத்தில் கருத்துச் செல்லுதல் கூடாது. கருத்துத் தோன்றின் சாதனத்தின் உறைப்பால் அதனை மாற்ற வேண்டும். இவ்வாறன்றிக் கருத்தை நிறைவேற்றின், அதுகூடா வொழுக்கமென இழித்துக் கூறப்படும். இக்கருத்துப் பற்றியே,

"அறனென்னப் பட்டதே யில்வாழ்க்கை யஃ
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று" [தும்

என்றனர் தேவர். இவ்வளவேயன்றித் துறவறமென்பதொன்றில்லையென்றாவது வேண்டாமென்றாவது திருவள்ளுவர் கூறவில்லை. துறந்து செய்யும் அறம் ஒன்றில்லையென்று அடிகள் பிறிதோரிடத்திற் கூறுகின்றார்கள். மெய்யுணர்தலே துறந்து செய்யும் அறமாகும். முப்பத்திரண்டு அறங்கள் இல்லாளோடிருந்து செய்யப் படுவனவென்பது வெளிப்படை.

"அடல் வேண்டுமைந்தின் புலத்தை
[விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

என்னுந் திருக்குறள் மனைவி மக்களைத் துறக்க வேண்டுமென்னும் பொருள் குறித்ததென்பது ஆராய்வார்க்கு இனிது விளங்கும். முற்றத் துறந்த பட்டினத்தடிகளும்,

"அறந்தா னியற்றும் அவனிலுங்
கோடியதிக மில்லந்
துறந்தா னவனிற் சதகோடி
யுள்ளத்துற வுடையோன்"

என்றனர். இதனால், மனைவியை விட்டு நீங்குந் துறவறமொன்றுண்டென்பதும், அது இல்லறத்தினும் மேம்பட்டதென்பதும், உள்ளத் துறவு புறத் துறவினும் மேம்பட்டதென்பதும் பட்டினத்தடிகள் கருத்தாதல் துணியப்படும். ஆகையால், உள்ளப் பற்றைத் துறந்து முன் வினைக்கு ஏற்பத் திருவருள் கூட்டுவித்தவாறு மனைவி மக்களோடிருந்தேனும் அவர்களைத் துறந்தேனும் இடையறாது இறைவன் றிருவடியைச் சிந்தித்துப் பேரானந்தப் பெருவாழ் வடைவோமாக. இம்மட்டில் அடிகள் உரை பற்றிய ஆராய்ச்சி முடிந்தது.

## முடிவுக் குறிப்பு

சைவ சித்தாந்த மகா சமாஜத்துப் பிரதம அறிக்கைப் பத்திரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அடிகளால் அச்சிடப்பட்டிருக்கின்றது. அதனைப் பார்த்தால் சமாஜத் தோற்றத்தின் உண்மையும் அடிகளுக்கும் எனக்குமிருந்த மனப் பான்மையும் நன்கு விளங்கும். பின்னர் சாதி வரம்பையழித்துவிட வேண்டுமென்று அடிகள் முற்பட்டமையால் இருவருக்குமுள்ள மனவொற்றுமை மாறுபட்டது. இப்பொழுதும் சாதி வரம்பையழித்தல் தருமமாகாதென்பது கருதி இது எழுதப்பட்டதேயன்றிச் செருக்கினால் எழுதப்படவில்லையென்பதை உண்மையாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



அடிகள் உரையையும் எனது ஆராய்ச்சியையும் நடுநிலையுடைய பெரியார் ஆராய்ந்து என் கருத்தில் பிழையிருப்பதாகத் தோன்றின், அதனையெனக்கு நேரிலாவது பத்திரிகை வாயிலாவது தெரிவிப்பின், வந்தனத்துடன் ஏற்றுக்கொள்வன். சைவ நூன்முறையின்றிக் கூறும் எவர் கூற்றையும் பொருட்படுத்தி விடை கூறேன்.

குறிப்பு :—திரு. முத்தைய பிள்ளையவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையை நடுநிலையுடைய பெரியார் உளங்கொண்டு பார்த்தல் இன்றியமையாதது. அவ்வாறு பார்க்கின் ஒன்று புலனாவது திண்ணம். அஃதென்னையோவெனின் நமது இந்திய தேசமும் தமிழ் நாடும் தற்போது நிற்கும் நிலையில் பிள்ளையவர்கள் கூப்பாடு கானகத்துக் கூக்குரல் **(Cry in the wilderness)** ஆகவே விளங்கும். சாதி வேற்றுமை வேண்டும் என்ற கருத்தை, முன்னேற்றம் என்ற தேர் விரைந்தோடும் ஓட்டத்திற் கெதிர்ப்படும் ஒரு சிறிய முட்டுக்கட்டைக்கு ஒப்பிடல் பொருந்தும். அத்தகைய முட்டுக்கட்டை, ஓட்டத்தை நிறுத்தவோ அல்லது எவ்வகையிலாவது தடை செய்யவோ போதிய வலியுடைத்தன்று என்பது திரு. பிள்ளையவர்கள் உள்ளிட்ட சைவர் அனைவரும் தங்கள் அனுபவத்தில் கண்கூடாகக் காண்பதொன்று. ஆகவே சாதி வேற்றுமையை ஒழித்தலே நலம் என்ற குறிக்கோளைப் பிழையெனக் கொள்ளாது அது சரியென்றே கொண்டு அதற்குரிய ஒழுக்க முறைகளைப்பற்றிச் சிந்தித்து எழுதுமாறு திரு. பிள்ளையவர்களை வேண்டுகிறோம்.—பத்திராசிரியர்.

---

# தலைமைப் பேருரைமேல் நிகழ்ந்த சில தடைகளுக்கு விடை

[மறைமலையடிகள்]

திருப்பாதிரிப்புலியூரிற் கூடிய சைவர் மகா நாட்டில் யாம் அவைத்தலைவரா யிருந்து நிகழ்த்திய தலைமைப் பேருரைக்கட் போந்த சில கருத்துக்களுக்கு மறுப்பாகத் 'தலைமைப் பேருரை யாராய்ச்சி' என்னும் ஒரு கட்டுரை திரு. பொ. முத்தைய பிள்ளை என்பவரால் எழுதப்பட்டுச், "சித்தாந்தம்" என்னும் திங்கள் தாளிலும் "சிவநேச"னென்னும் கிழமைத் தாளிலும் வெளிப் படுத்தப்பட்டிருக்கின்றது.

பழந் தமிழ் நூல்களிலுந், தமிழ்ச் சைவ நூல்களிலும் ஆழ்ந்து நிறைந்த கல்வி கேள்விகளுடையார், எமது தலைமைப் பேருரையினையும் அதன்மேலெழுந்த மறுப்பினையும் நடு நின்று ஒத்து நோக்குவார்களாயின், அவர்கட்கு நமது தலைமைப் பேருரையின் பொருள்கள் **ஆசிரியர் தொல்காப்பிய**னார் முதல் வந்த நம் பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர்களாற் கைக் கொள்ளப்பட்டு, நம் தமிழ்நாட்டவரை அன்பிலும் ஒற்றுமையிலும் இன்புற்று வாழச் செய்து வழங்கியவைகளாதலும், அதற்கு மறுப்பாய் எழுந்த பொருள்கள் பண்டிருந்த நம் தமிழ் நாட்டவரால் ஒரு சிறிதுங் கைக் கொள்ளப் படாமற், பின் வந்து குடியேறிய ஆரியர் தம்மைப் பலவகையாலும் உயர்த்தி நம் தமிழ் மக்களைப் பலவகையாலுந் தாழ்த்தி [illegible] வாழ்க்கையினைச் சீர்[illegible]பொருட்

187134
R(73m...)
...600 0..

டுக் கட்டிய சாதி வேற்றுமையும் புராணப் பொய்யுரையும் என்னும் மயக்கில் வீழ்ந்து தமக்கென அறிவிலரான போலிச் சைவரும் அவர்வழி நிற்பாரும் கைக்கொண்டு, மேலும் மேலும் நந்தமிழ் நாட்டைப் பாழ்படுத்துவனவாதலும், நன்கு விளங்கா நிற்கும். அவ்வாறு ஆழ்ந்து நிரம்பிய கல்வி யில்லாதார், குறுகிய நோக்கத்தாலுஞ் சாதிச் செருக்காலும் எழுதப்பட்ட அம் மறுப்பின் பொய்ப்பொருள் கண்டு மயங்காமைப் பொருட்டு, அம்மறுப்பின் கட்போந்தவற்றை ஈண்டெடுத்துக் காட்டி அவை தீய வாதலை விளக்குவாம்.

க. ‘ஆராயும் முறையில் காதலின்பத்துக்குத் தலைமை கூறி ஒவ்வொருவரும் தத்தம் மனஞ் சென்றவாறு சென்ற காதலின்பத்தைத் துய்த்தற்கு வகுப்பு வேற்றுமை தடையாயிருக்கின்றதென்றும், ஆகையால் அதனைத் தொலைத்து விடவேண்டுமென்றும் வற்புறுத்துகின்றது’ என்று அம்மறுப் பெழுதினவர் எமது தலைமைப் பேருரையின் நோக்கத்தைக் குறை கூறுகின்றனர்.

காதலன்புடையார்க்கு அக்காதல் அன்பின் வழியே மனஞ் செல்லுமல்லாமல், மனத்தின் வழிய காதல் ஆன்றோர் செய்யுள் வழக்கினுள்ளும் செல்லாமை உலக வழக்கினுள்ளும் வைத்துச் செவ்வனே அறியக் கிடந்தது. காதலென்பது ஒருவர் ஒருவரை இன்றியமையாராய் விழைந்து நிற்கும் பெரு வேட்கையாய், “எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக்காசு போலவும் நீர்வழி மிதவை போலவும் பான்மை வழியோடி இருவரையும் புணர்விக்கும்” திறத்த தென்பது ஆசிரியர் தெய்வப் புலமை நக்கீரனார் இறையனாரகப் பொருளுரையில் விளக்கியவாற்றால் நன்கு விளங்கும். இவ்வுண்மை எமது தலைமைப் பேருரையில் எடுத்துக் காட்டப்பட்ட பரிபாடற் செய்யுளிற் போந்த “காதற் காமம் காமத்திற் சிறந்தது” என்பதனாலும் நன்கு புலனாம். இவை யெல்லாம் நல்லாசிரியரை அடுத்து உணரும் பேறு வாயாத மறுப்புரைகாரர், மனஞ் சென்றவாறு சென்று துய்ப்பதே காதலின்ப மெனக் கரைந்தார். மனஞ் சென்றவா றெல்லாஞ் சென்று துய்ப்பது இழிந்த காம இன்பமே யாமென்பதும், அவ்விழிந்த காமத்தினையே ஆன்றோர்க ளெல்லாரும் வழுவெனக் கொண்டாரென்பதும் அம்மறுப்புரைகாரர் உணரார் கொல்லோ! விழுப்பமுந் தூய்மையும் வாய்ந்த காதலன்பின் வயப்பட்டார் இருவர் தம்முள் ஒருவரை யொருவர் உயிர்போல் நினைந்துருகி ஒழுகுந் தன்மையராதலின் அவர் மனம், அவர்தங் கர்தலன்பின் கீழடங்கி நின்று வேறு பிறர்பாற் செல்லாதாகலின், காதலன்புடையார்க்கு அவர்தம் மனம் அடங்காதோடிக் காமத் துறையிற் படிதல் சிறிதுமே இல்லையென்று அவர் உணர்வாராக. மற்றுக், காம வேட்கை யுடையார்க்கோ, அவரது மனம் அவர்வழி அடங்கி நில்லாது பலரையும் நச்சி நச்சிக் காமத் துறையில் வீழ்ந்து மாழ்குமாதலின், மனத்தின் வழிச் செல்வது காமமே யன்றிக் காதலன்றென்பது இனியாயினும் அவர் பண்டைத் தமிழ் நூல்களைப் பயின்று உணர்வாராக!

இனிக், காதலன்பின் நுகர்ச்சிக்கு வகுப்பு வேற்றுமை பெரிதுந் தடை



செய்வது என்னும் உண்மையை இவர் ஏளனஞ் செய்கின்றார். இவர் இகழ்ந்துரையாத வெறுங் காம நுகர்ச்சியிலாவது வகுப்பு வேற்றுமை தடை செய்து நிற்கின்றதா? என்பதைச் சிறிது உற்று நோக்குதல் வேண்டும். தம்மை அழுக்கந் திருத்தம் வாய்ந்த சைவரெனக் கருதிக் கொள்வோரில் எத்தனையோ பேர் தஞ்சாதி வரம்பு கடந்து மறைவிலே குறத்திகளை மருவுகின்றனரென்றும், புலைச்சிகளின் தோள்களை மருவிக் களிக்கின்றனரென்றும், பரத்தையர் வீட்டே குடியாய்க் கிடக்கின்றனரென்றும் பலர் பலகாற் சொல்லக் கேள்வியுற்றிருக்கின்றேம். இவர் புகழ்ந்து பேசும் இழிந்த காம நுகர்ச்சியே சாதி வரம்புக்குள் நில்லாது தம் வயப் பட்டார் சாதி வரம்பை மீறிச் செல்லுமாறு ஏவ, உயர்ந்த தெய்வக் காதலன்பின் வயப் பட்டார் சாதி வரம்பைத் துகளாக்கித் தாங்கொண்ட புனித ஒழுக்கத்தில் நிற்குமாறு அஃது அவரைச் செலுத்துதலாற் போதரும் இழுக்கென்னை? இத்தூயவொழுக்கம் நம் பண்டைத் தமிழ் மக்கட்கு உயிர்போற் சிறந்த விழுமிய ஒழுக்கமாதலின், இதனை உண்மையறிவுடையாரெவருஞ் சிறிதுங் குறை கூறாரென்க.

(உ) “தொல்காப்பியர் அருளிச் செய்தது இலக்கண நூல். அதில் பொருளிலக்கணங் கூறும் முறையில் இன்பத்தை அகப் பொருளாகவும், பொருள் அறம் வீடுகளைப் புறப் பொருளாகவும் வகுத்து, இன்பத்தைப் பற்றிக் கூறும் களவியலில் இன்பத்தை முன் வைத்துப் பொருளறங்களைப் பின் வைத்தார். உறுதிப் பொருள்களுள் இன்பந்தான் முதன்மையான தென்று அவர் கூறவில்லை. சொல்லப்புகுந்த பொருளை முதன்மையாக வைத்துக் கூறுதல் மரபு. கூறுங் காலத்து அதற்கு இன்றியமையாது வேண்டப் படுவது எதுவோ அதனையுங் கூறுதல் வழக்கு. அவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியர் அன்பு துணையாக இன்பம் நிகழவேண்டுமென் றருளிச் செய்தனர். இன்பம் பற்றிப் பொருளும் அறனும் உடன் கூறப்பட்டன” என்று அம்மறுப்புரைகாரர் எழுதிய இரண்டாம் பகுதியினைச் சிறிது ஆராய்வாம்.

தொல்காப்பியர் அருளிச் செய்தது இலக்கண நூலாதலின், அவர் பொருளை அகம் புறம் என வகுத்து, அகப்பொருளின்பாற் பட்ட இன்பத்தை முதற்கண்வைத்து, அறம்பொருள்களை அதன்பின் வைத்தாரல்லது, இன்பத்துக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்பது பற்றி அதனை முதற்கண் வைத்தாரல்லர்; என்று அம் மறுப்புரைகாரர் மேற்காட்டிய பகுதியிற் கூறித், தொல்காப்பியர் இன்பத்துக்கே முதன்மை கொடுத்தாரென்றும் எமதுரையை மறுக்கின்றனர். தொல்காப்பியம் இலக்கண நூலாதலின் அதன்கட் கூறிய முறை கொள்ளற்பால தன்றென்பதே இவரது கருத்தாகின்றது. இலக்கண நூலின் இலக்கணம் இன்னதென்று உணர்ந்தனராயின் இவர் இங்ஙனங்கூறி இழுக்கார். இலக்கண நூல்களெல்லாம் இலக்கிய நூல்களின் சொற்பொருளியல்புகளை நன்காய்ந்து, அவை தம்மையே முறைப்படுத்தி உரைக்குந் தன்மையவாமென்பது “இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்” என்னும் நன்னூற் சூத்திரத்தினை அறிந்த சிறுமகா

ரும் உணர்வர். இதுதானு முணராது இலக்கணமுறை இலக்கிய முறையின் வேறுவது எனக்கொண்ட அம்மறுப்புரைகாரின் தமிழறிவு சால அழகிது!

இலக்கியப் பொருளியல்புகளை முறைப்படுத்திச் சொல்லி விளக்குவதே இலக்கணமென்பது தமிழ்நூல் வடநூல் இயற்றிய ஆசிரியரெல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலின், தெய்வத் தொல்காப்பியனார் வகுத்து விளக்கிய 'அகப்பொருள்,' 'புறப்பொருள்' இலக்கணங்கள் அத்தனையும், அவர்காலத்தும் அவர்க்கு முன்னிருந்த சான்றோர் காலத்தும் இயற்றப்பட்ட நூல்களின் பொருளமைதிகளேயாதல் தெற்றென விளங்கா நிற்கும்.

இனிப், பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர் இயற்றிய இலக்கிய நூல்கள் தாமும், அஞ்ஞான்றை உலகியல் நிகழ்ச்சிகளை உள்ளவாறே எடுத்துக் கூறும் தன்மையவன்றி, உலகியலொழுக்கத்துக்கு மாறுவன சிறிதுங் கூறுவன அல்ல. இஞ்ஞான்று ஆரியர் தம் பொய் வழக்கின் பாற்பட்டு, உலகியல் வழக்கோடொவ்வாத பலவற்றைப் பொய்யாகப் புனைந்து கட்டிச் சொல்லுந் தமிழ்ப்புலவர் போலாது, பண்டிருந்த தமிழ் நல்லிசைப் புலவர்கள் பட்டது பட்டாங்கு மொழியும் பொய்யா நாவினர் என்பது பேராசிரியர் 'தொல்காப்பிய மரபியலிற்' கூறிய வுரையானும், பண்டைத் தமிழிலக்கியங்களை ஒருசிறிது உற்று நோக்குதலானும் இனிது உணரலாம். பண்டைக் காலத்துத் தமிழிலக்கியங்களிற் பெரும்பாலான இன்பத்தின் மேற்றான அகப்பொருளினையே மிகவிரித்து உரைத்தலும், இன்பத்தின் வழிப்படூஉம் ஏனை அறம் பொருள்களின் மேற்றான புறப்பொருளினைச் சுருக்கியே பாடுதலும், நன்குணர வல்லார்க்கே பண்டைத் தமிழாசிரியர் எல்லாரும் இன்பத்துக்கே முதன்மை கொடுத்தமை நன்கு புலனும். பழைய சான்றோர் செய்யுட்களைத் தொகுக்க எட்டுத்தொகையுள் 'நற்றிணை' நானூறு செய்யுட்களும், 'குறுந்தொகை' நானூறு செய்யுட்களும், 'ஐங்குறுநூறு' ஐந்நூறு செய்யுட்களும், 'கலித்தொகை' நூற்றைம்பது செய்யுட்களும், 'அகநானூறு' நானூறு செய்யுட்களும், பத்துப்பாட்டில் 'முல்லைப் பாட்டு,' 'நெடுநல்வாடை,' 'குறிஞ்சிப் பாட்டு,' 'பட்டினப்பாலை' என்னும் நான்கு பெரும் பாட்டுக்களும், பதினெண்கீழ்க்கணக்கில் 'கார்நாற்பது,' 'ஐந்திணை ஐம்பது,' 'ஐந்திணை எழுபது,' 'திணைமொழி ஐம்பது,' 'திணைமாலை நூற்றைம்பது,' 'திருக்குறள்' காமத்துப்பால் இருநூற்றைம்பது, 'நாலடியார்' காமத்துப்பால் முப்பது செய்யுட்களும் ஆக மொத்தம் இரண்டாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்று நான்கு அருந்தமிழ்ச் செய்யுட்களும் அகப்பொருளின் பாலதாகிய இன்பத்தையே நுதலுகின்றன.

இனி, எட்டுத்தொகையில் 'பதிற்றுப் பத்து' நூறு செய்யுட்களும், 'பரிபாடல்' எழுபது செய்யுட்களும், 'புறநானூறு' நானூறு செய்யுட்களும், 'பத்துப்பாட்டில்' ஆறு செய்யுட்களும், பதினெண்கீழ்க் கணக்கில் 'நாலடியார்' முன்னூற்றெழுபது செய்யுட்களும், 'நான்மணிக்கடிகை' நூறு செய்யுட்களும், 'இனியவை நாற்பது' நாற்பது செய்யுட்களும், 'இன்னா நாற்பது' நாற்பது செய்யுட்களும், 'களவழி நாற்பது' நாற்பது செய்யுட்களும், 'திருக்குறள்' ஆயிரத்து எண்பது செய்யுட்களும், 'திரிகடுகம்' நூறும், 'ஆசாரக் கோவை' நூறும், 'பழமொழி' நானூறும், 'சிறுபஞ்ச மூலம்' நூறும், 'முதுமொழிக் காஞ்சி' ஒன்றும், 'ஏலாதி' நூறும், ஆகமொத்தம் மூவாயிரத்து நாற்பத்தேழு செய்யுட்களும் புறப்பொருளின் பாலவாகிய அறம் பொருள்களை நுதலுகின்றன. இவ்விரண்டையும் நுதலும் மூவாயிரத்து நாற்பத்தேழு செய்யுட்களையும் இருகூறாகப் பகுத்தாற், சிறிதேறக் குறைய அறத்துக்கு ஆயிரத்து ஐந்நூற்று இருபத்து மூன்றும், பொருளுக்கு ஆயிரத்து ஐந்நூற்று இருபத்து மூன்று செய்யுட்களுமே வருகின்றன. இன்பத்தை நுதலுஞ் செய்யுட்கள் மட்டும் இரண்டாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்று நான்கென்பது மேலே காட்டப் பட்டமையால், இன்பத்தை நுதலுஞ் செய்யுட்கள் ஏனை அறம் பொருள்களைத் தனித்தனியே நுதலுஞ் செய்யுட்களினும் சிறிதேறக்குறைய ஆயிரஞ் செய்யுட்கள் மிகுந்திருத்தல் காணப்படும். இதுவேயுமன்றி, அறம் பொருள்களை நுதலும் பாட்டுக்களுள்ளும் இன்பத்தைக் கூறும் பகுதிகளும் ஆங்காங்கு விராய் வந்திருக்கின்றன. இவ்வாறாகப் பழந்தமிழ் இலக்கிய நூல்கள் யாங்கணும் பெரும்பான்மையாக எடுத்துப் பேசப்படுவது இன்பமேயாய் இருத்தலினாலும், ஏனை அறம் பொருள்களைச் சுட்டுவன அவற்றில் மிகக் குறைந்தனவாயிருத்தலினாலும் அவ்விலக்கியங்களின் வழியே இலக்கணநூல் செய்த ஆசிரியர் தொல்காப்பியனாரும், அவற்றோடு மாறுகொள்ளாமைப் பொருட்டு இன்பத்தை முதற்கண்ணும், ஏனைப் பொருள் அறங்களை அதன்பின்னுமாக வைத்து,

"இன்பமும் பொருளும் அறமும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"

என்று சூத்திரஞ் செய்தருளினார்.

எனவே, ஒருகாரணமும் பற்றாது தாம் எடுத்துக்கொண்ட அகப்பொருளுக் கேற்ப ஆசிரியர் தொல்காப்பியனார் இன்பத்தை முதற்கண் வைத்தாரல்லது, உறுதிப் பொருள்களில் இன்பமே முதல் நிற்கவேண்டுமென்பது அவர்க்குக் கருத்தன்று என்ற அம்மறுப்புரைகாரர் கூற்றுப் பொருத்தமில் போலிக் கூற்றுமென்க. பண்டைத் தமிழிலக்கியங்கள் எல்லாம் உறுதிப் பொருள்களில் முதல் நிற்றற்குரிய இன்பத்தின் விழுப்பம் உணர்ந்தே அதனை ஏனையவற்றினும் பார்க்க உயர்த்தெடுத்துப் பேசுவ ஆயின. அந்நுணுக்கம் உணர்ந்தே தொல்காப்பியனாரும் அகப்பொருளொழுக்கமாகிய இன்பத்தினை முன்வைத்து, ஏனைப் புறப்பொருள் ஒழுக்கங்களை அதன்பின் வைப்பாராயினர்.

இனி, அம்மறுப்புரைகாரர், அறமே முதல் நிற்கற்பாலது இன்பம் அந்நீரதன்று என்றதூஉம் பொருந்தாமை காட்டுதும். ஒரு புல்நுனிமேல் நிற்கும் நீர்த்துளியிற் பெருக்கக் கண்ணாடியின் உதவிகொண்டு காணப்படும் சிற்றுயிர்கள் முதல் மக்கள் ஈறான எல்லா உயிர்கள் மாட்டும் இன்ப உணர்ச்சியும், இன்பத்தைப் பெறும் வேட்கையும், அதற்கேற்ற முயற்சியும் ஒரு தினைத்தனையும் பிழையாமற் காணப்படுகின்றன. அதுபோல் அறத்தைப் பற்றிய உணர்ச்சியும், அதனைப் பெறும்

வேட்கையும், அதற்காம் முயற்சியும் அங்ஙனமெல்லா உயிர்களிடத்துங் காணப்படாமல், ஆறறிவுடைய மக்களுள்ளும் பிற உயிர்கள்பால் அன்பு நிகழப்பெற்ற ஒரு சிலர் மாட்டே காணப் படுகின்றன. இவ்வாற்றால் இன்ப உணர்ச்சியினும் அறவுணர்ச்சி மிகச்சிறுகிய நிலையில் உளதாதலும், அதுவும் பிற உயிரின் இன்பத்தைத் தம்முயிரின்பத்தோ டொப்பக் கருதினார் பாலன்றி உளதாகாமையும் தேர்ந்து காணவல்லார்க்கு இன்ப உணர்ச்சியின் வாயிலாகவே அறவுணர்ச்சி விளைவதன்றி, அறவுணர்ச்சி வாயிலாக இன்ப உணர்ச்சி விளையாமை இனிது விளங்கா நிற்கும். இதுபற்றியன்றே **தெய்வத் திருமூலரும்,**

“நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”

என்று அருளிச் செய்தார். ஒருவன் தான்பெற்ற இன்பத்தை இவ்வையகத்துள்ள எல்லா உயிர்களும் பெறுதல் வேண்டுமென விழைந்து, அதற்கேற்ப முயலும் முயற்சியே அறம் எனப்படும். பிறவுயிரின் இன்பத்தைக் கருதாது செய்யும் முயற்சிகளெல்லாம் அறத்துக்கு மாறான மறமெனப்படும். பிறர்க்கு வறுமையால் வந்த துன்பத்தை நீக்குதற் பொருட்டுப் பொருளுடையார் அவர்க்குப் பொருளீந்து செய்யும் அறம் எத்துணை இன்பம் பயக்கின்றது. இதுபற்றியன்றே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

“ ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் [தாமுடைமை
வைத்து இழக்கும் வன்கண வர்.”

என்று அருளிச் செய்தார். தமக்கும் பிறர்க்கும் நிகழும் இன்பம் இனைத்தென்பது உணர்ந்த இன்ப உணர்ச்சி உடையார்க்கன்றி, ஏனையோர்க்கு அறநினைவு சிறிதும் உளதாகாது. இவ்வுண்மை அறிவுடையார்க் கெல்லாம் இனிது விளங்கிக் கிடப்பவும், இது தானும் உணர மாட்டாது இன்பத்தினும் அறத்திற்கே முதன்மை சொல்லப் புகுந்த மறுப்புரைக்காரர் உரை தொல்லாசிரியர் நூல் வழக்கிற்கும் ஏனை உலகியல் வழக்கிற்கும் மாறுகொண்டு போலியுரையாய் ஒழிந்தமை காண்க.

எல்லா உயிர்க்கும் பொதுவான இன்ப உணர்ச்சியின் வாயிலாகவே அவ்வுயிர்கட்கு முயற்சியுண்டாகா நிற்கின்றது. அம்முயற்சியினாற் பின்னும் பின்னும் பிறவி வளர்ச்சி உரம்பெற்றுப் பிறவிக்கு வாராமல் அறியாமையில் அமிழ்ந்திக் கிடக்கும் உயிர்கள் பிறவிக்கு வந்து அறிவு கூடுகின்றன. இன்பமும் அறிவும் இவ்வாற்றாற் பெருகப்பெருக அறநினைவும் அறஞ்செய்யும் முயற்சியும் மக்கள்பால் முறை முறையே தலைப்படுகின்றன. அம்முறையினைக் கூர்ந்து பார்க்கும் வழி, இன்பத்தினால் முயற்சியும், அம்முயற்சியாற் பொருளும், அப்பொருளால் அறமும், அவ்வறத்தால் முடிவிற் பேரின்பமும் ஒன்றினொன்று உளவாய் வருகின்றன என்பதும், எல்லா அறிவும் முயற்சியும் இன்பத்தினின்றே தோன்றி இன்பத்தின் கண்ணே சென்று முடிகின்ற என்பதும், நன்கு தெளியக் கிடத்தலின், முற்றுணர்வு வாய்ந்த **ஆசிரியர் தொல்காப்பியனார்** இன்பத்தை முன் வைத்துப் பொருளை அதன்பின் வைத்து, அறத்தை அதன்பின் வைத்துச் சூத்திரஞ் செய்த முறையே உலக வழக்கொடும், நூல் வழக்கொடும் முழுதொத்து என்றும் அசையா வைரமலைபோல் திகழ்ந்து நிற்பதாம் என்க. பண்டைத்தமிழ் ஆசிரியர்களேயன்றித் தமிழகத்துக்குப் புறத்தேயுள்ள நாடுகளில் உயிர்வாழ்ந்த பண்டை நாகரிக மக்களுள் வழங்கிய பலவேறு மொழி இலக்கிய நூல்களுள்ளும் இன்பமும் பொருளுமே முன் வைக்கப்பட்டு அறம் அவற்றின் பின்னதாக நிறுத்தப்பட்டிருத்தலும் நினைவிற் பதிக்கற்பாற்று. (தொடரும்)

# அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரவுண்மை

## பரிசு பெற்ற கட்டுரை

[அ. மு. சரவண முதலியார்]

### (க) தோற்றுவாய்

முற்காலத்திலிருந்த பெரியோர்களின் வரலாற்றுண்மையை அறிந்து கோடற்குக் கருவிகளாகவுள்ளன பல; அவை அகச்சான்று, புறச்சான்று, கல்வெட்டு முதலியன. அகச்சான்றை ஆதாரவாகக் கொண்டு கூறப்பட்ட புறச்சான்றுகள் எவ்வகையானும் எள்ளப்படாதனவாகும். அகச்சான்று ஆதாரவில்லாத பகுதிகள் புறச்சான்றிற் காணப் படுமேல் அவற்றைக் கூறியவர் கூறப்பட்டார் காலத்திற்கு அண்மைக் காலத்திற்றோன்றியவராய், சரித்திர வுணர்ச்சி, உலகியலுணர்வு, புனைந்துரைக்கு அஞ்சுதல் முதலியன வுடையராய் இருந்திருப்பரேல் அவர் கூற்றும் வலியுடையதாகும்.

இனி, இவ்வாதரவுகளைக் கொண்டு சரித்திர வுண்மை காண்பவர் அச்சரித்திரத்தில் அத் தலைவர்களாற் செய்யப்பட்ட செயற்கரிய செயல்கள் காணப் படுமேல் அவற்றின் உண்மையை அறியுங் கருவியாகிய யோகக் காட்சி கொண்டு அறிய வேண்டுமேயன்றி அதற்கு வேறுபட்ட துறையினின்று கொண்டு ‘அவை மக்கட்டன்மைக்கு மீறியன’ என்று கருதி அவையிற்றைப் பொய்யெனக் கூறுதல் அறிவுடைமை யாகாது. எனவே சரித்திர வுண்மை காணுங் கருவி வேறு; செயற்கரிய செயல்களின் உண்மையை அறியுங் கருவி வேறு என்பது பெற்றாம்.

இனி, அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரத்தைப் ‘பெரிய புராணம்’ என்று வழங்குகின்ற ‘திருத்தொண்டர் புராண’த்தில் விரித்துக் கூறியருளியவர் ‘**சேக்கிழா**’ரென்னும் புலவர் பெருமகனாராதலின் முதலில் அவர் தன்மையைத் தெரிந்துகோடல் இன்றியமையாததாகும்.

### (உ) சேக்கிழார்

திருத்தொண்டர் வரலாற்றைக் கூறத் தொடங்கிய இவர் தில்லைக்குச் சென்று திருக்கூத்தன் திருமுன் நின்று பருகற்கினிய அப்பரங்கருணைத் தடங்கடலை உருகிப் பெருகியுளங்குளிர முகந்துகொண்டு அதனைப் பாடி முடித்தற்குரிய ஆற்றலைத் தனக்குத் தந்தருள வேண்டுமென்று குறையிரக்க, அவ்விறைவனது இன்னருளால் ‘உலகெலாம்’ என்னும் ஒலி அசரீரியாக எழுந்தது. இவ்வுண்மையை,

“ அருளினீர்மைத் திருத்தொண்டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்மொழி வானிழல்கூறிய
பொருளி னாகுமெனப் புகல்வாமென்றே ”

என்னும் செய்யுளால் அவரே விளக்கியருளினார்.

இங்ஙனம் வானிழல் கூறியது கொண்டு அனைத்தையும் பாடி முடித்தாரெனக் கூறுவர் சிலர். அது அன்புக்

கண் ஒன்றுமட்டுங் கொண்டு கூறுவ தாகும். அதனோடு ஆராய்ச்சிக் கண்ணையுங்கொண்டு நோக்கினால், அவர் வன்றொண்டர் அருளிய 'திருத்தொண்டத் தொகை'யையும் ஏனைய தேவாரங்களையும், நம்பியாண்டார் நம்பியின் 'திருத்தொண்டர் திருவந்தாதி'யையும் ஆதாரவாகக் கொண்டு ஒவ்வொரு அடியார் இருந்த ஊருக்கும் தாமே சென்று ஆங்காங்குள்ள குறிகளையுஞ் செவிவழிச் செய்திகளையும் கண்டும் கேட்டும், தாம் அமைச்சராக இருந்தமையின் அறிஞர் பலரை ஏவி உண்மைகளை அறிந்தும், இவ்வாதாரவுகளுடன் தாமும் தம் அறிவுக்குப் பொருந்த நன்கு ஆராய்ந்துமே பாடி முடித்தனர் என்பது நன்கு புலனாகும். இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உள ; எனினும் நமக்குப் பொருள் இது இல்லையாகலின் விரித்திலம் ; ஆனாலும் அவர் தம்மால் துணிய முடியாத வற்றை எங்ஙனங் கூறிப் போந்தன ரென்பதை மட்டுங் காண்போம்.

நம்பியாண்டார் நம்பி கூறாது விட்ட மரபையும் ஊரையும் நாயன்மார் சிலருக்குக் கூறிச் சென்றிருப்பதை நோக்க அவர் பல வகையாலும் உண்மை யறிந்தமை புலனாகும். 'இதனைப் புனைந்துரையாகக் கொள்ளலாகாதோ' வெனின் நாயன்மார் சிலரின் மரபினைக் கூறாது போந்தனராகலின் அங்ஙனங் கொள்ளுதற்கில்லை யென்க. இன்னும் அவர், திருநாவுக்கரசு திருப்பதிகத் தொகையைத் திருநாவலூரார் திருநின்றியூர்த் தேவாரத்தில்,

'இணைகொ ளேழெழு நூறிரும் பனுவலீன்ற
வன்றிரு நாவினுக் கரையன்'

எனக்கூறி யிருப்பதையும், நம்பியாண்டார் நம்பி 'திருநாவுக்கரசு திருவேகாதசமாலை'யில் அதனையே,

'பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி'

எனக்கூறி யிருப்பதையும் நோக்கி, தொகை நூலாசிரியரும் வகை நூலாசிரியரும் 'ஏழெழுநூறு' என்னும் எண்ணின்கண் மாறுபடாது 'பனுவல்' என்றும், 'பதிகம்' என்றும் கூறுவதிற்றுணிந்து ஒன்றனை ஏற்காது,

"நின்றியூர் மேயாரை
நேயத்தாற் புக்கிறைஞ்சி
ஒன்றியவன் புள்ளுருக்
பாடவொ ருடையவர
சென்றுமுல கிடர்நீங்கப்
பாடியவே ழெழுநூறும்
அன்று சிறப்பித்தஞ்சொற்
றிருப்பதிக மருள்செய்தார்"

(ஏயர்கோன் கலிக்காமர் புராணம். கருo)

என்று கூறிப் போந்தமையை நோக்க அவர் தம் தூய வுள்ளம் புலனாகும்.

## (க) 'அறுபத்து மூன்று' என்ற எண் சரியா ?

தனியடியார் அறுபத்து மூவர் என்ற கொள்கை, தொகை நூலாசிரியராகிய நம்பியாரூரர் எண்ணத்திலு மில்லை ; சேக்கிழாருக்கும் அது உடன்பாடில்லை. வகை நூலாசிரியராகிய நம்பியாண்டார் நம்பியே திருவந்தாதியின் கண்,

"கூட்டமொன்பா னொடறுபத்து
மூன்று தனிப்பெயரா
ஈட்டும்பெருந் தவத்தோ
ரெழுவத் திரண்டாம்"

என 'அறுபத்துமூன்று' என்னும் எண் கொடுத்தார். திருவன்றொண்டர் திருவுள்ளத்தில்லை யென்பதற்கு அவர் 'திருத் தொண்டத் தொகை' இறுதிப் பாட்டில் தமது அத்தரையும் அன்னையையும் ஏனைய நாயன்மார்கட்குக் கூறியாங்கு 'அடியேன்' என்னாது தம்மை விளக்கிக் கொள்ளுமுகத்தால்,



"என்னவனு மரனடியே
யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன்
றிருநாவ லூர்க்கோன்"

எனக் கூறியமையே சான்றாகும். 'அரனடியே அடைந்திட்ட' என்னுங் குறிப்பால் நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும் முறையே வகையிலும், விரியிலும் கூறி வைத்தனர் ; அதனாற் போந்த இழுக்கொன்றுமில்லை யெனினும், 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பது ஐயத்திற்கு இடந்தந்து நிற்பது கண்கூடு. அவர் நம்பியாண்டார் நம்பி கருத்துப்படி தொகையடியாராக இருப்பின் 'திருத்தொண்டத் தொகை'யில் தொகை யடியாரைக் குறிப்பதாகிய 'பத்தராய்ப் பணிவார்' என்று தொடங்கும் பாட்டுடன் சேர்த்திருத்தல் வேண்டும். அங்ஙனமின்றித் தனி யடியார் வரிசையில் வைத்திருத்தல் கருதத்தக்கது. முதலில் 'தில்லைவாழந்தணர்' எனத் தொகை யடியார் கூறப்பட்டனரே யெனின், அது ஆண்டவன் திருவாக்கென்க. அன்றியும் தொகையடியாரனைவரும் சென்ற காலத்தில் இருந்தவரென எண்ணுதற் கிடனின்றி மூன்று காலத்திலும் இருந்தவராகவும், இருக்கின்றவராகவும், இருப்பவராகவும், எண்ணற்றவராகவு மிருக்கப் 'பொய்யடிமை யில்லாத புலவர்' மட்டும் முன்னிருந்த சங்கப் புலவர்களென்பதும், அவர் நாற்பத்தொன்பதின்ம ரென்பதும் எங்ஙனம் பொருந்தும் ? அன்றியும் அவருள் பல்வேறு சமயத்தாரு மிருந்தன ரென்பதை எவரே மறுப்பார் ! இவ்வாற்றாற்றான் நமது சேக்கிழார் பெருந்தகை,

"தரணியிற் பொய்மையிலாத்
தமிழ்ச்சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர்முதனாற்பத்
தொன்பதுபல் புலவோர்
அருணமக்கீயுந் திருவால
வாயான் சேவடிக்கே
பொருளமைத் தின்பக்
கவிப்பலபாடும் புலவர்களே"

என நம்பியாண்டார் நம்பி பாடியிருக்கவும், கபிலரைப்பற்றி யாதல், பரணரைப்பற்றி யாதல் நக்கீரைப்பற்றி யாதல் ஒரு சிறிதுங் கூறாததோடு, அவர் பெயரையுங் கூறாது, மதுரை அல்லது 'ஆலவாய்' என்று குறித்தாலும் சங்கப்புலவர்களைக் கொண்டு விடுவாரோ" எனக் கருதி,

"செய்யுணிகழ் சொற்றெளிவும்
செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே
யெனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார்
மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத
புலவரெனப் புகழ்மிக்கார்"

"பொற்பமைந்த வரவாரும்
புரிசடையார் தமை யல்லாற்
சொற்பதங்கள் வாய்திறவாத்
தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினின் மெய்யடிமை
யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையா
ரறிந்துரைக்க வல்லார்கள்"

எனக் கூறியருளினர். இதனாலேயே அவர் அடியார்களின் தொகையைத் தாங்கூறாது விடுத்தனரென்க; எனவே 'அறுபத்து மூன்று நாயன்மார்' என்று கூறுவதினும் 'தனி யடியார்' என்று கூறுவதே தொகை நூலாசிரியருக்கும், விரி நூலாசிரியருக்கும் ஒத்த கருத்தென்க.

## (ச) நம்பியாரூரர்

இவர் திருமுனைப்பாடி நாட்டின்கண் உள்ள திருநாவலூரின்கண் சடையனார் என்னும் சிவ வேதியருக்கு, இசைஞானியாரென்னும் அம்மையார் திருவயிற்றில் திருவவதாரஞ் செய்தருளினவர் (சரித்திர விரிவைப் பெரியபுராணத்துட் காண்க.) இவர் தாய், தந்தை இவரென்பதும், ஊர் இதுதானென்பதும் இவர் கூறியருளிய அகச்சான்று கொண்டே அறியலாம் ; அது,

"என்னவனு மரனடியே யடைந்திட்ட
[சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்"

என்பது.

இவரது முற்பிறவியின் செய்தியையும், ஈண்டுப் போந்தமையின் காரணத்தையும், அது இறைவன் அருளிப்பாடு என்பதையும்,

“ மாயங்காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங்காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்துபோ தீரே ”

என்னும் தேவாரம் குறிப்பாலுணர்த்துகின்றது.

“நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்கமுனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயுமூர் ”

என்பதனால் நரசிங்க முனையரையர் தம்மை அபிமானித்து வளர்த்து வந்தமையும், அவரும் ஒரு நாயனார் என்பதையும், தமது காலத்திலே இருந்தவ ரென்பதையுங் குறித்தருளினார்.

இவர் தம்மை இளமையிலே இறைவன் தடுத்தாண்டமையையும் அது வெண்ணெய் நல்லூரி லென்பதையும், அதுகாலை ஆவணங் காட்டியதையும் பலவிடங்களிற் கூறியருளுகின்றார்; அவை,

“ வெண்ணெய் நல்லூரில்
வந்தெனை யாளுங்கொண்ட ”

“ அடக்கங்கொண் டாவணங் காட்டிநல்
வெண்ணெயூ ராளுங்கொண்டார் ”

“ அன்று வந்தெனை யகலிடத்தவர்
முன்னாளா தாகவென் றாவணங்காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை
யொளித்த சித்திலத்திரட் டொத்தினை ”

“வெண்ணெய் நல்லூரில்
அற்புதப்பழ ஆவணங் காட்டி
அடியனா யென்னை யாளதுகொண்ட ”

என்பன.

“ தன்மையினா லடியேனைத் தாமாட்
கொண்ட நாட்சபை முன்
வன்மைகள் பேசிட வன்றொண்ட
னென்ப தோர்வாழ்வு தந்தார் ”

என்னுந் தமிழ்மறை, ஆண்டவன் ஆட்கொள்ள வந்த ஞான்று ‘பித்தன்’ முதலிய வன்சொற்களை ஆரூரர் கூறியதையும், அது காரணமாக அவ்விறைவன் அவருக்கு ‘வன்றொண்டர்’ என்னுந் திருப்பெயரை அருளினமையையும் உணர்த்துவது காண்க.

ஆண்டவன் தம்பொருட்டு எளிது வந்து தூது சென்றதையும், தமக்குத் தோழனாகித் தாம் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத் தருளினமையையும்,

“ தூதனை யென்றனை யாள் தோழனை ”

“ அடியேற் கெளிவந்த தூதனைத்
தன்னைத் தோழமை யருளித்
தொண்டனேன் செய்த துரிசெலாம்
பொறுக்கும் நாதனை ”

என்பனவற்றால் விளக்கி யருளுகின்றார்.

“ மாழை யொண்கண் பரவையைத்தந் தாண்
டானை ”

“ சங்கிலி யோடெனைப்
புணர்த்த தத்துவனை ”

“ சங்கிலி மென்றோள் ஆர்த்தனன் ”

“ பின்றான் பரவைக்
குபகாரஞ் செய்தாயோ ”

என்பனவற்றால், தமக்குப் பரவையார், சங்கிலியார் என்னும் இருமனைவிய ருண்டென்பதையும், அவர்களைத் தமக்கு மணஞ் செய்வித்தவன் இறைவனே என்பதையும் விளக்குகின்றார்.

திருக் குருகாவூரில் ஆண்டவன் தமக்கு உணவளித்தமையை அவ்வூர்ப் பதிகத்திலே,

“ பாடுவார் பசி தீர்ப்பாய் ”

என்பதனாற் குறிப்பித்து, பாடுபவர் தாமே என்பதை,

“ என்றுமுட்டாப்பாடு மடியார்
தங்கண் காணாது
குன்றுமுட்டிக் குழியில்வீழ்ந்தால்
வாழ்ந்து போதீரே ”

‘ சந்தம்பலவும் பாடுமடியார் தங்கண் காணாது’

“ வாக்கென்னுமாலை கொண்டுன்னை
யென்மனத்தே ஆர்க்கின்றேன் ”

என்பன போன்றவற்றால் விளக்கி யருளினார். இவ்வாதரவுகளைக் கொண்டுதான்,



“ அற்சனைபாட்டே யாகுமாதலால்
மண்மே னம்மைச்
சொற்றமிழ்பாடு கென்றார்
தூமறைபாடும் வாயார் ”

என இறைவன் கூற்றாக வைத்துச் சேக்கிழார் கூறியதூஉ மென்க.

திருக்கச்சூராலக் கோயிலிற் சிவபெருமான் உச்சிப்போதில் பிச்சையெடுத்துவந்து தமக்கு உணவு கொடுத்தமையை,

“ உச்சம்போதா வூரூர்திரியக்
கண்டாலடியா ருருகாரே ”

என்பதனாற் குறிப்பித் தருளினார்.

இவர் குண்டையூர்க் கிழவரிடம் நெல்லுப் பெற்றதையும், அதனை ஆரூருக்குக் கொண்டு சேர்க்கும் பொருட்டு ஆண்டவனை வேண்டி அதனை முடித்துக் கொண்டதையும்,

“ நீள நினைந்தடியேன் ”

என்று தொடங்கும் திருக்கோளிலிப் பதிகத்தால் விளக்கியருளினார்.

திருமுது குன்றத்தில் ஆண்டவன் தமக்குப் பொன் அருளினமையையும், அதை ஆண்டுள்ள மணி முத்தா நதியிற் போட்டு விட்டுத் திருவாரூர்க் கமலாலயம் என்னுங் குளத்தில் பரவையார் முன்னிலையில் தேடிக் காணாது வருந்த அவர் சிரித்தமையும் பிறவும் ‘பொன் செய்த மேனியினீர்’ என்று தொடங்குந் திருப்பதிகத்திற் கூறியருளினார்.

அப்பதிகத்தின் இரண்டாவதுபாட்டு,

“ உம்பரும் வானவரு
முடனேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித்
திகழுமுது குன்றமர்ந்தீர் ”

என்பது.

திருவதிகை வீரட்டானத் துள்ள ‘சித்தவடமட’த்தின் கண் இரவில் ஆண்டவன் தன் திருவடியைத் தமது திருமுடியில் வைத்ததையும், அதனையறியாது தாம் இகழ்ந்துகூறியதையும்,

“ எம்மான்ற னடிக்கொண்டென்
முடிமேல் வைத்திடுமென்னு
மாசையால் வாழ்கின்ற
வறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில
வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன்
போலியானே ”

என்பதனாலும், அதுபோது தாம் ‘இங்கென்னைப் பலகாலு மிதித்த நீயார்’ என்று வினவ ‘என்னை யறியாயோ’ என்று கூறி அவ்விறைவன் மறைந்தருளிய செய்தியை,

“ தம்மானை யறியாத சாதியா ருளரோ ”

என்பதனாலும் குறிப்பித்தார்.

இவர் கோட்புலி நாயனார் பெண்களாகிய வனப்பகை, சிங்கடி யென்பவர்களை அந் நாயனார் திருமணஞ் செய்து கொள்ளுமாறு வேண்டவும் அதனை மறுத்து அவர்களைத் தம்புதல்விகளாக ஏற்றுக் கொண்டமையை,

“ சிங்கடி தந்தை ”
“ வனப்பகை யப்பன் ”
“ வனப்பகை யவளப்பன் வன்றொண்டன் ”
“ சிங்கடியப்பன் ”

எனவருவனவற்றாற் காண்க.

இனி, இவர் சங்கிலியாரை மணக்கும் பொருட்டு அவரைப் பிரிவதில்லை யென்று சூளுரைத்துப் பின் பிரிந்தமையின் பயனாகக் கண் மறைந்தமையை, ‘அழுக்கு மெய்கொடு’ என்று தொடங்குந் திருப்பதிகத்தாலும், “சங்கிலிக் காகவென் கண் கொண்ட பண்ப” என்பதனாலும், “பழியதனைப் பாராதே படலமென் கண் மறைப்பித்தாய்” என்பதனாலும் விளக்குகின்றனர்.

அங்ஙனங் கண்மறைந்த இவர் ஆண்டவனைக் கண்கொடுக்கும் பொருட்டுப் பலவாறு வேண்டவும் அருளாமை கண்டு ஊன்றுகோல் ஒன்று வேண்டினாரென்பதை,

“ ஊன்றுகோலெனக் காவதொன் றருளாய் ”

என்பதும், ஆண்டவன் திருவெண்

பாக்கத்தில் நம்பி மனம் வருந்தி 'நீ கோயிலில் இருக்கின்றாயோ' என்ன ஊன்றுகோலொன்று அருளி, 'இருக்கின்றோம் போகீர்' என்றருளின னென்பதை,

"ஊன்றுகோலொன் றருளி யுளோம்
போகீரென் றானே"

என்பதும், அவர் "சங்கிலியாருக்குச் சூளுரைக்குங் காலத்து நீர் மகிழடியின்கீழே போயிரும்" என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டமையை அச்சங்கிலியாரிடம் அவ்வாண்டவன் கூறி மகிழடிக் கீழே சூளுரைக்கும்படி செய்வித்தமையையும், திருவெண்பாக்கத்தில் பகைவனைக் கண்டது போலச் சினந்து கூறியதையும்,

"பொன்னவிலுங் கொன்றையினாய்
போய்மகிழ்க் கீழிருவென்று
சொன்னவெனைக் காணமே
சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே
யிங்கிருந்தா யோவென்ன
ஒன்னலரைக் கண்டாற்போ
லுளோம்போகீ ரென்றானே"

என்பதும், சூள் தவறிய காலத்துக் கண் மறைந்ததுடன், உடம்பிலும் பிணி வந்தமையை,

"கண்ணிலே னுடம்பில் லடுநோயாற் கருத்த
தனக்கே பொறையானேன்." [ழிந்

என்பதும், அந்நோய் திருத்துருத்தியில் நீங்கியதைத் "மின்னுமா மேகங்கள்" என்று தொடங்குந் திருப்பதிகமும், காஞ்சிபுரத்தில் ஒரு கண் பெற்றமையை "ஆலந்தா னுகந்தமுது செய்வானை" என்று தொடங்குந் திருப்பதிகமும், திருவாரூரிற்சென்று மற்றொரு கண் வேண்டினமையை,

"மீளா வடிமை யுமக்கே யானாய்"

என்று தொடங்குந் திருப்பதிகமும், அங்ஙனமே மற்றக் கண்ணும் பெற்றமையி,

"காணாத கண்கள் காட்டவல்ல கறைக்கண்
[டனே"

னாலும் நன்கு விளங்குதல் காண்க.

இனி, பரவையார் ஊடலை நீக்க ஆண்டவன் சென்றதைக் குறிக்கின்ற,
"தூசுடைய வகலல்குற் றூமொழியாளூடல்
தொலையாத காலத்தோர் சொற்பாடாய்வந்து"
என்பது,

"பத்தூர்புக் கிரந்துண்டு"

என்று தொடங்குந் திருநாகைக்காரோணப் பதிகத்திருந்தாலும் அப்பதிகம் நம்பிவாக்கோ என ஐயுறும் நிலையிலிருப்பதா லிங்குகொள்ளப்படவில்லை.

ஏயர்கோன் கலிக்காமர் செய்தி,

"ஏயர்கோனுற்ற விரும்பிணி தவிர்த்து"

என்னுங் குறிப்பா லறியக் கிடக்கின்றது.

இவருக்கு இறைவன் இறைவியோடும் போந்து, "கூடலையாற்றூர் வழி இது" வென்று நினைப்பூட்டினமை,

"வடிவுடை மழுவேந்தி"

என்று தொடங்கும் பதிகத்தால் விளங்கும்.

சேரமான் பெருமாள் தமக்குக் கொடுத்த பொருள் முதலியவற்றைத் திருமுருகன் பூண்டிக்கு அணித்தாகச் செல்லும்பொழுது இறைவனாணையாற் பூத கணங்கள் வர, அவற்றை மீண்டும் பெற்றமை,

"கொடுகு வெஞ்சிலை"

என்று தொடங்கும் பதிகக் குறிப்பால் அறியக் கிடக்கிறது.

இவர் முதலைவாயினின்றும் பிள்ளையை வருவித்தமை,

"காரைக்கான் முதலையைப்
பிள்ளை தரச் சொல்லு காலனையே"

என்பதனால் அறியலாம்.

இவர் இறுதியில் இறைவன் ஆணையின்படி அவனால் அனுப்பப்பட்ட வெள்ளானையின்மேலேறித் திருக்கயிலாயமலை சேர்ந்தமையும், போங்கால் நீர்க்கடவுளாகிய வருணன் வந்து வழிபட்டமையும், அவனால் தாம் அதுபோது பாடிய பதிகத்தை இந்நிலவுலகிற்கு வரச் செய்தமையும் பிறவும்,

"தானெனை முன்படைத்தான்"

என்று தொடங்குந் திருப்பதிகத்திற் காண்க. (தொடரும்)

# திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை, ஆசிரியர் மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதுபோல வரையப்பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்புப் பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| அறத்துப்பால் கலிகோ பயிண்டு | விலை ரூபா | 3 | 4 | 0 |
| பொருட்பால் ,, | ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் ,, | ,, | 1 | 12 | 0 |

**பண்டிட் - K. குப்புச்சாமி முதலியார்,**
திருக்குறள் விளக்க ஆசிரியர்,
3/2, பிள்ளையார்கோவில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி.



கண்கவரும் உயர்ந்த பதிப்பு! வெளிவந்து விட்டது!

# மூவர் தேவாரம் (பண்முறை)

திருமுறை யாராய்ச்சியில் வல்ல
க. சதாசிவ செட்டியார் அவர்கள் பார்வையிட்டது

| | கலிக்கோ | ரெக்சின் or பட்டு |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் | ரூ. 7 8 0 | ரூ. 8 0 0 |
| அப்பர் தேவாரம் | ,, 6 8 0 | ,, 7 0 0 |
| சுந்தரர் தேவாரம் | ,, 3 0 0 | ,, 3 8 0 |
| மூவர் தேவாரம் முழுதும் | ,, 15 0 0 | ,, 16 8 0 |

குறிப்பு:—இதன்கண் பதிக வரலாறு, பதிக அட்டவணை, தல அட்டவணை, அருஞ்சொற் பொருள் விளக்கம், பாட்டு முதற்குறிப்பகராதி, ஆசிரியர் திருவுருவப் படங்கள், [illegible] படங்கள் முதலியன அடங்கியன.

| | |
|---|---|
| அகத்தியர் தேவாரத் திரட்டு மூலமும் உரையும். 2-வது பதிப்பு வெளிவந்து விட்டது. அழகிய கலிக்கோக் கட்டிடம். | ரூ. 1 12 0 |
| நால்வர் தாலாட்டு. (திருவுருவப் படங்களுடன்) | ,, 0 8 0 |
| சிவஞானசுவாமிகள் வசனப் பிரபந்தத்திரட்டு | ,, 1 12 0 |
| ,, செய்யுட் பிரபந்தத்திரட்டு | ,, 2 4 0 |
| பிள்ளைத் தமிழ்க் கொத்து (6 பிள்ளைத் தமிழ் நூல்கள்) | ,, 3 0 0 |
| முருகன் புகழ்மாலை 2-வது பதிப்பு | ,, 3 0 0 |
| திருக்குறள் மொழிப்புரை கலிக்கோ | ,, 1 4 0 |

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட்,**
6, பவளக்காரத்தெரு, சென்னை.



# முருகவேள் பனுவல் திரட்டு

## சுப்பிரமணிய பக்தர்கள் பாராயணஞ் செய்தற்குரிய சிறந்த நூல்

இதில், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா, கந்தர்சஷ்டி கவசம், திருமுருகாற்றுப்படை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை, திருத்தணிகை சந்நிதிமுறை, கந்தபுராணம், தணிகைப் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கியிருக்கின்றன. இரண்டாம் பதிப்பு. இப்பதிப்பில் முன்னினும் பாக்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 1.

**முருகவேள் புத்தகசாலை,**
இராயப்பேட்டை, சென்னை.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

சைவ சமயத்திற்குப் பிரமாண நூல்களாய் விளங்கும் தேவாரத் திருமுறைகளை நாடெங்கணும் பரப்பவேண்டுமென்று தீர்மானித்த சைவ சித்தாந்த மஹா சமாஜத்தினர், இதுபோது முதற்கண் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தை வெளியிடத்தொடங்கி 10,000 பிரதிகள் அழகிய கிளேஸ் கடிதத்தில் டபிள்கிரௌன் 16-பக்கங்கொண்ட அளவில் 14 பாரத்தில் (214 பக்கம்) பதித்து முடித்துவிட்டனர். தேவாரத் திருமுறைகளை அடக்க விலைக்கு எவரும் எளிதிற் பெற்றுப் பயனடைதற்கு இதுவே ஏற்ற தருணம். சமயாபிமானங் குன்றிவரும் இக்காலத்தில், இத்தகைய தொண்டிற்குப் போதிய உதவிபுரிய வேண்டியது சைவ மக்கள் கடமையன்றோ? கிறிஸ்தவர் முதலிய ஏனைய சமயிகள் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்புதற்குப் பல்லாயிரக் கணக்கான பொருள்களைச் செலவிட்டு நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் இலவசமாகவும் அடக்க விலைக்கும் கொடுத்து வருவதாலன்றோ அச்சமயங்கள் எங்கணும் பரவி வருகின்றன.

சைவ சமயிகளுள் செல்வர்களில்லாமற் போகவில்லை. அச்செல்வர்கள் தங்கள் பொருளைச் சமயத்துறையில் சிறிது செலவிட முன் வருவார்களாயின், எண்ணிறந்த அருஞ் செயல்களைச் செய்து முடிக்கக்கூடும். இச் சுந்தரர் தேவாரம் 10,000 பிரதிகள் அச்சிட்டுப் பரப்புவதற்காக ஏற்படும் சுமார் ரூபா 2000 சைவ மக்கட்கு ஒரு பெருந்தொகையன்று. சிலர் கூடி முடித்து விடலாம். பெரும் புண்ணியத்தையும் பெறலாம். வேண்டுவது சமயப்பற்று ஒன்றே. சிவாலயத் திருப்பணி, திருவிழா முதலியவைகட்குச் செலவிடும் ஏராளமான பொருள்களில், ஒரு சிறு பகுதியினை இத்தகைய அறிவு வளர்ச்சிக் கேதுவான தொண்டிற்குப் பயன்படுத்தினால் மக்கள் சமய நெறிபற்றி ஒழுக ஏதுவாயிருக்கும். ஆங்காங்குள்ள சைவ சபையினர் இவ்வடக்கவிலைப் பதிப்பை முன்பணம் கொடுத்து வாங்கி அவ்வவ்விடங்களில் விற்பனையும் செய்யலாம்.

சுந்தரர் தேவாரம் முடிந்தவுடன் முறையே அப்பர் சம்பந்தர் முதலிய ஆசிரியன்மார்களது தேவாரத்தையும் அடக்க விலைக்கு அச்சிட்டுக் கொடுக்க சமாஜத்தினர் கருதியுள்ளார்கள்.

இப்போதே ஐந்து ரூபா முன்பணம் அனுப்புவோருக்குச் சுந்தரர் தேவாரம் ரூபாய்க்கு ஐந்து புத்தகங்கள் வீதம் 25 புத்தகங்கள் அனுப்பப்படும். தபால் செலவு பார்சல் செலவு முதலியன வேறு. தனிப்புத்தகம் விலை அணா 4.

அன்பர்கள் எவரேனும் இப்புண்ணியச் செயலுக்கு நன்கொடையளிப்பார்களாயின், அது அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வன்பர்கள் பெயர்கள் சித்தாந்தத்தில் பதிக்கப்படும்.

இதுவரையில் கையொப்ப மிட்டுள்ள அன்பர்கள் உடனே பணம் அனுப்பி வைப்பதோடு, ஏனைய நண்பர்களையும் சேர்த்து அடியிற்கண்ட விலாசத்திற்கு முன்பணம் அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L.,
காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.